# மகாத்மாவும் மகாகவியும்

'கல்கி'

மங்கள நூலகம்

நுங்கம்பாக்கம் :: சென்னை-34

மூன்றும் பதிப்பு : ஏப்ரல் '69

விலை : ரூ. 2·00

அச்சிட்டோர் :
பாலா பிரிண்டர்ஸ்
சென்னை-34

## பதிப்புரை

'கல்கி' அவர்களுக்கு ஞாபகச் சின்னம் என்பதுபற்றி திரு ம.பொ.சி. அவர்கள் ஒரு பிரசங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். 'அவர் எழுதிய நூல்கள் உள்ளன; அவர் வளர்த்த கல்கி ஸ்தாபனம் இருக்கிறது; இன்னும் பாரதி மணி மண்டபத்தையும், காந்தி மண்டபத்தையும் பார்த்தால் 'கல்கி' அவர்களுடைய நினைவு தன்னால் எழும்' என்றார்கள்.

பாரதி மணி மண்டபத்தைக்கூடப் பார்க்க வேண்டாம். பாரதி என்னும் சொல்லைக் கேட்கும்போதே தமிழ் மக்கள் இன்று 'கல்கி' அவர்களையும் நினைவு கூர்வார்கள். பாரதியாரின் எத்தனையோ லட்சியக் கனவுகள் நினைவானதுபோல 'கல்கி' அவர்களது மனோரதங்கள் பலவும் நிறைவேறியுள்ளன.

அவற்றுள் மிக முக்கியமான இரண்டு அபிலாஷைகள் மகாத்மாவுக்கும் மகாகவிக்கும் நினைவுச் சின்னங்கள் நிறுவிவிட வேண்டும் என்பனதான். அந்தக் கனவுகள் பிறந்தது, சதா சர்வ காலமும் அவர் அதே நினைவாக இருந்து அவற்றுக்காக மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டு உழைத்தது எல்லாவற்றையும் இந்நூலில் காண்கிறோம். அந்த லட்சியக் கனவுகளில் ஒன்று நிறைவேறுவதை அவர் அருகிலிருந்து பார்த்து மகிழ்ந்ததையும் படித்து உணர்கிறோம். அன்று மேற்கு வங்கக் கவர்னராயிருந்த ராஜாஜி பாரதி மணிமண்டபத்தை எட்டயபுரத்தில் திறந்து வைத்த வைபவத்தைக் கண்டு களித்த 'கல்கி' அவர்கள், கிண்டி ராஜபவனத்தில் மகாத்மா காந்தி பிரார்த்தனை மண்டபம் திறந்து வைக்கப் பட்டபோது அமரருலகிலிருந்து அதனைப் பார்த்து மனம் பூரித்திருப்பார்கள். மகாத்மாவிடமும் மகாகவியிடமும் அவருக்கிருந்த ஈடுபாடு, அவர்களுடைய மணி வாக்குகளிலே அவர் வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கை இவற்றையும் இந்நூலின் வாயிலாக நன்கு அறிய வருகிறோம். இவையெல்லாம் அவ்வப்போது கல்கி பத்திரிகையில் அவர் எழுதி வந்த தலையங்கங்களும் கட்டுரைகளும் ஆகும்.

சாதாரணமாகப் பத்திரிகைகளில் ஒவ்வொரு சந்தர்ப்ப சூழ்நிலையை ஒட்டி எழுதப்படும் தலையங்கங்களும் கட்டுரை

களும் இன்னொரு காலத்துக்கு ஏற்றதாய் இருப்பதில்லை. ஆனால் மகாத்மாவும் மகாகவியும் எக்காலத்தவருக்கும் மட்டுமின்றி எந்நாட்டவருக்கும் சொந்தமானவர்கள் அல்லவா?

இரண்டு மண்டபத் திருப்பணிகளும் 'கல்கி' அவர்களுடைய லட்சியக் கனவுகள்தான் என்றாலும் தமிழ் மக்களின் அன்புப் பணியும் ஆகும். தமிழ் மக்கள் சார்பிலே 'கல்கி' அவர்கள் பொறுப்பேற்று நடத்திவந்த புனிதப் பணிகள். ஆகவேதான் இக்கட்டுரைகளும் தலையங்கங்களும் எழுதப் பட்டுப் பல நாட்களாகியும் இன்றைக்கும் இவற்றுக்கு வாசகர்களிடையே நல்ல வரவேற்பு இருக்கிறது. இதோ மூன்றாம் பதிப்பும் வெளியாகிவிட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக, பணவசூலுக்குப் போவது பற்றி எழுதினாலும் சரி, மகாத்மாவின் உபதேசங்களைக் குறித்து எழுதினாலும் சரி, 'கல்கி' அவர்கள் கையாண்ட அற்புதமான தனித்தன்மை வாய்ந்த வசன நடை இருக்கிறதே அதற்காகவே இந்நூலை விரும்பிப் படிப்பார்கள்.

* * *

**இன்ப சுதந்திர நின்**
**இன்னருளாற் பெற்ற தன்றோ?**
**அன்பற்ற மாக்கள்**
**அதைப் பறித்தாற் காவாயோ?**

என்று கேட்ட அமரகவிக்குச் சீனர் நம்மீது போர் தொடுத்திருக்கும் இந்நாளில் விழா எடுப்பது மிகப் பொருத்தமாகும். எக்காலத்துக்கும் ஏற்றதான கவிகளைப் புனைந்து சென்ற தீர்க்கதரிசி அவர். அவரது பாடல்களை இன்று பாடிப்பரவிப் புதுத் தெம்பும் உற்சாகமும் பெறுகிறோம். கவியரசர் பாரதியின் எண்பத்தோராவது பிறந்த நாள் வைபவம் கோலாகலமாகச் சென்னையில் நடைபெறவிருக்கும் தருணத்தில் 'கல்கி' அவர்கள் எழுதிய மகாத்மாவும் மகாகவியும் என்னும் இந்நூலை வெளியிடுவதில் பேருவகை யடைகிறோம்.

*சென்னை - 34*
*9—12—62*

**மங்கள நூலகத்தார்**

# மகாத்மாவும் மகாகவியும்

## நமது அதிதி

தமிழ் நாட்டிற்குள்ளே, ஏன், பாரத நாட்டிற்குள்ளே என்றும் சொல்லலாம், முதன் முதலாகப் பெண்களின் உரிமைக்காகப் போராடி வெற்றியடைந்த பெண்மணி யார் என்று தெரியுமா? அவருடைய திருநாமம் ஸ்ரீமதி மீனாக்ஷி! அவருடைய இருப்பிடம் தென் மதுரைப் பதி. மதுரையில் அவருடைய வாசஸ்தலம் மிக்க விசாலமானது; நாலு புறமும் கோபுரங்கள் அமைந்தது. பாண்டிய நாட்டின் தலைநகரில் உள்ள பிரசித்திபெற்ற கோயிலைத்தான் சொல்கிறோம். அந்தக் கோயிலில் குடிகொண்டு அருள்புரியும் மீனாக்ஷி அம்மனைத்தான் குறிப்பிடுகிறோம்!

தமிழ் நாட்டிலும் பாரத தேசத்திலும் எத்தனையோ புகழ்பெற்ற ஆலயங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் அந்தந்த ஆலயத்தில் சாந்நித்யம் பெற்று விளங்கும் சுவாமிகளின் பெயராலேயே விளங்குகின்றன. காசிவிசுவநாதர் கோயில், பூரி ஜகந்நாதர் கோயில், பண்டரிபுரத்துப் பாண்டுரங்கர் கோயில், காஞ்சி ஏகாம்பரர் கோயில், கும்பகோணம் கும்பேசுவர சுவாமி கோயில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில் என்று இப்படிப் பெரும்

பாலும் அந்தந்த ஆலயங்களில் பிரதிஷ்டை பெற்றுள்ள சுவாமியின் பெயரைக் கொண்டே விளங்குகின்றன.

ஆனால், மதுரைக் கோயில் மட்டும் 'மீனாக்ஷி அம்மன் கோயில்' தான்.

நான்மாடக்கூடலில் ஸ்ரீ சுந்தரேசுவரர் எத்தனையோ திருவிளையாடல்களைப் புரிந்து ஒரு பெரிய புராணமே பெற்றிருந்த போதிலும், கோயிலைக் குறிப்பிடும்போது, எல்லாரும் 'மதுரை மீனாக்ஷி அம்மன் கோயில்' என்றுதான் சொல்கிறார்கள்.

எனவே பெண்ணுரிமை இயக்கம், பெண் விடுதலை இயக்கம், பெண் சமத்துவ இயக்கம் ஆகிய இயக்கங்களுக்கெல்லாம் வெகுகாலத்துக்கு முன்பே அஸ்திவாரம் அமைத்து வழிகாட்டி வெற்றியும் பெற்ற பெருமையும் மகிமையும் மதுரை மீனாக்ஷி அம்மனையே சேர்ந்ததாகும்.

அத்தகைய சக்திவாய்ந்த மீனாக்ஷி அம்மனுக்கு அடுத்த வாரத்தில் மற்றொரு பெரிய மகிமை ஏற்படப் போகிறது.

மதுரை மீனாக்ஷி அம்மன் ஆலயத்துக்குள் மகாத்மா காந்தி சென்று அம்மனையும் சுவாமியையும் தரிசிக்கப்போகிறார்!

* * *

சாதாரணமாக மகாத்மாஜி சுவாமி தரிசனத்துக்காக ஆலயங்களுக்குப் போவது கிடையாது. தாம் இருக்குமிடத்திலேயேதான் இறைவனைத் தியானிப்பது

வழக்கம். தினந்தோறும் சாயங்காலம் தாம் தங்குமிடங்களில் அடியார் குழாத்துக்கு மத்தியில் தெய்வப் பிரார்த்தனை நடத்துவது வழக்கம். தற்சமயம் தியாகராஜ நகரில் ஹிந்திப் பிரசார சபைக் கட்டிடத்துக் கருகிலுள்ள மைதானத்தில் மாலை வேளைகளில் அவ்விதம் பிரார்த்தனை நடந்து வருகிறது. லட்சக் கணக்கான ஜனங்கள் கூடிப் பிரார்த்தனையில் கலந்துகொள்கிறார்கள். சென்னை நகரமானது என்றைக்கும் கண்டறியாத காட்சிகளைத் தியாகராஜ நகரில் இந்த வாரத்தில் கண்டு வருகிறது.

இவ்விதம் மகாத்மா காந்தி தாம் தங்குமிடத்திலேயே எங்கும் நிறைந்த இறைவனுக்குப் பிரார்த்தனை நடத்துவது வழக்கமாயிருக்க, மதுரையிலே மட்டும் மீனாக்ஷி அம்மன் ஆலயத்துக்கு எதற்காகச் செல்கிறார்?

ஆறு வருஷத்துக்கு முன்னால் அந்தப் பிரசித்தி பெற்ற ஆலயத்தில் நடந்த ஓர் அற்புத சம்பவத்தின் காரணமாகத்தான்.

அந்த அற்புத சம்பவம் என்ன? ஜகன் மாதாவான மீனாக்ஷி அம்மன், கருணையே வடிவமான பராசக்தி, தன் ஆலயத்தின் கதவுகளை அகலமாகத் திறந்து ஹரிஜனங்கள் உள்படத் தன் புதல்வர்கள் சகலமானவர்களும் கோயிலுக்கு வந்து தன்னைத் தரிசிக்கலாம், தன் திருவருளைப் பெறலாம் என்று கருணை கூர்ந்த சம்பவந்தான்.

அச்சமயம் சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாக இருந்த ராஜாஜியைக் கருவியாகக்கொண்டு

மதுரை மீனுக்ஷி அம்மன் அந்தக் காரியத்தை அன்று நடத்தி வைத்தாள்.

இரண்டாயிரம் வருஷமாக நடக்காத சம்பவம், ஒரு நாளும் நடவாது என்று பலரும் எண்ணிய சம்பவம், ஹிந்து மதத்தின் பெயரால் பலரும் மூர்த்தண்யமாக எதிர்த்த மேற்படி அபூர்வ சம்பவம் மதுரையில் நடந்தது. அதைக் குறித்துப் பாரத தேசமே வியந்து கொண்டாடியது.

காங்கிரஸ்காரர்கள் மந்திரி உத்தியோகம் ஏற்றதற்கு இந்த ஒரு காரியமே போதும் என்று எல்லாரும் ஒருமுகமாகச் சொன்னுர்கள்.

அந்த மகத்தான சம்பவம் காரணமாகத்தான் இன்று மகாத்மா காந்தி மதுரைக்குப் போகிருர். மதுரை மீனுக்ஷி அம்மன் ஆலயத்துக்கும் போகப் போகிருர்.

*　　　*　　　*

மதுரையிலிருந்து மகாத்மா பழனிக்கும் செல்கிருர்.

ஸ்ரீ மீனுக்ஷி அம்மனின் செல்வப் புதல்வரும், தமிழகத்தின் அதிதேவதையும், தமிழ் மக்களின் குல தெய்வமுமான முருகக் கடவுள் பழனி மலைமீது கோயில் கொண்டிருக்கிருர் அல்லவா?

அன்னை காட்டிய வழியைப் பின்பற்றிப் புதல்வரும் அதே சமயத்தில் தம் ஆலயத்தைச் சகலருக்கும் திறந்துவிட்டு அருள் புரிந்தார்.

இது காரணமாகத்தான் மகாத்மா பழனி ஆண்டவர் சந்நிதிக்கும் செல்கிறார்.

மகாத்மா காந்திக்கு இப்போதெல்லாம் பிரயாணம் செய்தல் மிகவும் அசௌகரியமா யிருக்கிறது. பிரயாணத்தையே நிறுத்திவிட்டுச் சிவக்கிராமத்தில் தமது ஆசிரமத்தில் இருக்கவே அவருக்கு விருப்பம்.

கல்கத்தாவிலிருந்து சென்னை வரும் வழியில் ஒரிஸ்ஸாவிலும் ஆந்திர நாட்டிலும் அவரை இறங்கச் செய்வதற்கு ஆங்காங்குள்ள தேச பக்தர்கள் எவ்வளவோ பிரயத்தனப் பட்டார்கள். அதெல்லாம் பலிக்கவில்லை.

பங்களூரிலிருந்து தூது கோஷ்டி வந்து பங்களூர் சீதோஷ்ண நிலைமை மிக நன்றாயிருக்கிறதென்று சொல்லி, "ஒரு லட்சம் ரூபாய்ப் பண முடிப்பு அளிக்கிறோம்" என்றும் சொன்னார்கள்.

அதையும் மகாத்மா ஒப்புக்கொள்ளவில்லை.

ஆனால் மதுரைக்கும் பழனிக்கும் யாரும் அழைக்காமலே போகிறார்.

இதிலிருந்து, மகாத்மா காந்தி ஹரிஜன சேவையையும் ஆலயப் பிரவேச இயக்கத்தையும் எவ்வளவு பரம முக்கியமாகக் கருதுகிறார் என்பது வெளியாகிறது.

* * *

தமிழ் நாட்டில் கொஞ்ச நாளாகச் சில காங்கிரஸ் வாதிகளும் தேசபக்தர்களும் ஒரு விபரீதமான

போக்கைக் கைக்கொண்டு வருவதைப் பார்க்கிறோம். மதுவிலக்கு, ஹரிஜனசேவை, ஆலயப் பிரவேசம் முதலிய நிர்மாணத் திட்டங்களைக் குறித்து அவர்கள் அசட்டையாகப் பேசுவது வழக்கமாகி வருகிறது. சுதந்திரப் போரில் தங்களுடைய தீவிரத்தைக் காட்டுவதற்காக அவர்கள் அவ்விதம் பேசிவருகிறார்கள்.

ஆனால், அவர்களுடைய போக்கு மிகப் பிசகான போக்கு, தேச சுதந்திரத்தையே தடை செய்யும் போக்கு என்பதில் சந்தேகமில்லை.

சட்ட மறுப்புச் செய்து சிறை செல்வது, சட்ட சபையில் முட்டுக்கட்டை போடுவது எல்லாம் அந்தந்தச் சந்தர்ப்பம் நேரும்போது அவசியமான காரியங்கள் தான்.

ஆனால் மேற்படி திட்டங்களை யெல்லாம் எவ்வளவு தான் கையாண்டாலும் தேசம் சுதந்திரத்தை இழந்ததற்கு அடிப்படையான காரணம் எதுவோ, அதை நிவர்த்தி செய்தால் அல்லாமல் நாம் சுதந்திரம் பெற முடியாது. அப்படிப் பெற்றாலும் அது நீடித்து நிற்காது.

புத்தி பூர்வமாக யோசித்துப் பார்த்தாலும் சரி, கர்ம வினை என்று வைத்துக் கொண்டாலும் சரி, இந்தியா சுதந்திரத்தை இழந்ததற்கு ஒரு முக்கிய காரணம் நம்மிடையேயுள்ள தீண்டாமைக் கொடுமை தான்.

வெளி நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்த முஸ்லிம்கள் ரொம்ப அதிகமாய் வைத்துக்கொண்

டால் சில லட்சம் பேர்தான் இருப்பார்கள். அவர்கள் இப்போது எட்டு கோடிப் பேருக்குமேல் பெருகிப் பாகிஸ்தான் பூதத்தைக் கிளப்பியிருப்பதும் "தேசத்தைத் துண்டாடு; இல்லாவிடில் தேச சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை போடுவோம்" என்பதும், எல்லாம் தீண்டாமையின் காரணமாக ஏற்பட்ட வினைதான்.

எனவே, இந்தியாவின் விடுதலைக்கு மற்றப் போர்த் திட்டங்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு தீண்டாமை விலக்கு, ஆலயப் பிரவேசம் ஆகியவையும் முக்கியமாகும்.

இதை யெல்லாம் மகாத்மாவின் மதுரை—பழனி விஜயம் நமக்கு நன்கு நினைவூட்டுகிறது.

* * *

**சென்னை** நகரவாசிகள் கூடிய வரையில் மகாத்மாவிடம் நல்ல பெயர் வாங்கியிருக்கிறார்கள். சில சமயம் மகாத்மாவின் கண்டனங்களுக்கும் புகார்களுக்கும் ஆளானபோதிலும், லட்சக் கணக்கான கூட்டம் என்பதை எண்ணும்போது ஜனங்கள் இவ்வளவு அமைதியாகவும் ஒழுங்குடனும் நடந்துகொண்டது பாராட்டத் தக்கதேயாகும்.

ஆனால் மதுரை வாசிகளும் பழனி வாசிகளும் சென்னைக்காரர்களைத் தோற்கடித்துவிடவேண்டும். மகாத்மாவின் விஜயத்தின்போது பூரண அமைதியுடனும் ஒழுங்குடனும் நடந்துகொண்டு சென்னை வாசிகளைக் காட்டிலும் மகாத்மாவிடம் நல்ல பெயர் வாங்கவேண்டும்.

தமிழர்கள் செய்த தவப் பயனால் வந்திருக்கும் நமது ஒப்பற்ற பெருமை வாய்ந்த அதிதி தமிழ் நாட்டை விட்டுத் திரும்பிப்போன பிற்பாடும், அவருடைய உள்ளத்தில் தமிழ்நாட்டைப் பற்றிய இனிமையான ஞாபகங்களே குடிகொண்டிருக்கும்படி நாம் நடந்துகொள்ள வேண்டும்.

* * *

சென்னையில் முதல்நாள் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாத்மா காந்தி பேசும்போது, தாம் முதன்முதலில் 1919ஆம் வருஷத்தில் சென்னைக்கு வந்ததுபற்றிய ஞாபகத்தை எடுத்துக் கூறினார். அப்போது தமக்கு முன்பின் பழக்கமில்லாத ராஜாஜியின் வீட்டில் தங்கியதாகவும், அப்போதுதான் ஏப்ரல் மீ 6வ சத்தியாக்கிரஹ தினமாகக் கொண்டாட வேண்டுமென்ற யோசனை தம் மனத்தில் உதித்ததாகவும் எடுத்துச் சொன்னார். இந்தத் தடவை சென்னைப் பிரயாணம் தமக்கு இஷ்டமே இல்லையென்றாலும், ஏதோ கடவுளுடைய சித்தத்தினால்தான் இங்கு வரும்படி நேர்ந்ததாகவும் தெரிவித்தார்.

இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னால் நமது ஒப்பற்ற தலைவர் சென்னைக்கு வந்தது எவ்வளவு தேசத்துக்கு மகத்தான பயனுள்ளதாயிற்றோ, அது போலவே இந்த முறை அவர் விஜயமும் பயனுள்ளதாகட்டும் என்று மதுரை மீனாக்ஷி அம்மனையும் பழனி ஆண்டவரையும் இறைஞ்சிப் பிரார்த்திக்கிறோம்.

---

*1946 ஜனவரி 27ந் தேதி கல்கி இதழ் தலையங்கம்.*

# மகான்கள் தலையெழுத்து!

சமீபத்தில் காந்திஜி பம்பாய்க்குப் போயிருந்த போது, சிலர் அவருக்குக் கறுப்புக்கொடி பிடித்ததாகவும் அவர் தங்கியிருந்த குடிசை மேலே கற்களை வீசியதாகவும் செய்தி வந்திருக்கிறது.

அது மாத்திரமல்ல; அந்தக் குடிசையையே கொளுத்தவும் சிலர் முயன்றார்களாம்.

அப்படிக் கொளுத்த முயன்றவர்கள் வேறு யாருமல்ல, காந்திஜியின் அன்புக்கு மிகவும் பாத்திரமான ஹரிஜனங்கள்தான் என்பதை அறியும்போது நமக்கு உண்டாகும் அதிசயத்துக்கு அளவே யில்லை.

அப்படி காந்திஜி ஹரிஜனங்களுக்கு என்ன தீங்கு செய்திருப்பார்!

சென்ற இருபது இருபத்தைந்து வருஷகாலமாக அவர் ஹரிஜன சேவையையே தமது வாழ்க்கை லட்சியமாகக்கொண்டு அல்லவா வாழ்ந்து வந்தார்!

“பிர்லா மாளிகையில் வசிப்பதைக் காட்டிலும், இனி தோட்டிகளின் மத்தியிலேயே வாழ்வேன்” என்றல்லவா கூறினார்!

அப்படியிருக்கும்போது, காந்திஜி தங்கியிருந்த குடிசையைக் கொளுத்த அந்த ஹரிஜனங்கள் முயன்றதற்குக் காரணம் என்னவாயிருக்கும்?

அதற்கு ஒரே ஒரு காரணம் இருக்கிறது!

அது காந்திஜி ஒரு பெரிய மகான்! என்ற காரணமேயாகும்.

மகான்களுடைய தலையெழுத்தெல்லாம் ஒரே மாதிரியாகவே இருக்கும். அதாவது, அவர்கள் உயிரோடிருக்கும் காலத்தில் அவர்களுக்குச் சேர வேண்டிய நியாயமான புகழ் கிடைக்காது, மரியாதை கிடைக்காது.

ஒன்று, உலகம் அவர்களைச் சிலுவையில் அறைந்து கொல்லும்; அல்லது வேறு ஏதாவது ஒரு வகையில் அவமரியாதை செய்யும்.

எல்லா மகான்கள் விஷயமும் இப்படியிருக்கும் போது காந்திஜி மட்டும் இதற்கு எப்படி விதி விலக்காக முடியும்?

இங்கு மாத்திரம் என்ன? பம்பாய் மாகாணத்தையும் பம்பாய் ஹரிஜனங்களையும் நாம் ஏன் குறை கூற வேண்டும்?

இந்த விஷயத்திலே நம் சென்னை மாகாணம் பம்பாய் மாகாணத்தைக் காட்டிலும் ஒருபடி முன்னேறியல்லவாயிருக்கிறது!

பம்பாய் மாகாணத்திலே காந்திஜி தங்கியிருந்த குடிசையை மாத்திரம் எரிக்க முயன்றார்கள்.

அந்தக் குடிசை மேலே கல்லை மாத்திரம் வீசியெறிந்தார்கள்.

ஆனால், சென்னை மாகாணத்திலோ சிலர் அவருடைய உருவப்படத்தையே எரித்தார்கள்.

தமிழ் நாட்டு அரசியல் சம்பந்தமாக அவர் தம்முடைய மனத்திலிருந்த அபிப்பிராயத்தை வெளியே தெரிவித்ததற்காக, அவர்மீது பரமபக்தி பூண்ட அவருடைய சிஷ்யர்களே அவரைத் தூற்ற முயன்றார்கள்.

அப்படியிருக்கும்போது, பம்பாயில் நடந்ததைப் பார்த்து நாம் அதிசயப் படுவதற்கு என்ன இருக்கிறது?

---

1946 ஏப்ரல் 7உ கல்கி இதழில் வெளியான அரசியல் குறிப்பு.

# தவம் பலித்தது!

ஆறு நிமிஷ நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்களை அழித்த அணுசக்தியைக் காட்டிலும், ஆறு நாட்களில் லட்சக்கணக்கானவர்களை அளவற்ற ஆபத்தினின்றும் காப்பாற்றிய ஆத்ம சக்தி எத்தனையோ மடங்கு மேலானதென்பதில் சந்தேகம் என்ன?

இந்த உண்மையை இப்போதுதான் மேல் நாட்டுப் பத்திரிகைகள் முதல் தடவையாக ஒப்புக் கொண்டிருக்கின்றன! கண்ணெதிரில் பலனைக் கண்ட பின்தான் மேல் நாட்டினரின் மனத்தில் அந்த உண்மை உறைத்திருக்கிறது.

இன்றைய உலகில் ஆத்ம சக்தி, அனுஷ்டான அசாத்தியமானது என்று கருதியவர்கள் பாரத நாட்டில் நிகழ்ந்துள்ள சம்பவங்களைக்கண்டு பிரமித்துப்போயிருக்கிறார்கள்.

உண்ணாவிரதத்தின் மூலம் மகாத்மா காந்தி பெற்றுள்ள வெற்றி, அணுகுண்டைக் காட்டிலும் மகத்தான சக்தியொன்று இருக்கிறது என்பதை நிரூபிக்கிறதென்று பிரபல பிரிட்டிஷ் பத்திரிகை கூறுகிறது.

மேற்படி வெற்றியானது மேல் நாட்டினரின் மனத்தில் ஒருங்கே பொறுமையையும், நம்பிக்கையையும் உண்டுபண்ணி யிருக்கிறதென்றும், அந்த அற்புத சக்தியின் மகிமையை மேல் நாடுகள் சிரத்தை

யுடன் கவனித்து வரவேண்டுமென்றும் 'லண்டன் நியூஸ் கிரானிகள்' பத்திரிகை பயபக்தியுடன் குறிப்பிட்டிருக்கிறது.

"காந்திஜியின் ஆத்ம சக்திக்கு எதிரே எவ்வித ஸ்தூல ஆயுதங்களும் வெற்றிபெற முடியாது என்பதை ஐரோப்பாவும் அமெரிக்காவும் உணர்ந்து வெகு காலமாகின்றது. மனிதனின் சிருஷ்டிகள் மனிதனையே கபளீகரம் செய்துவிடாமல் தடுக்க முடியும் என்பதையும், எக்காலத்திலும் மேற்படி சிருஷ்டிகளைக் காட்டிலும் மனிதனே மேலானவன் என்பதையும் காந்திஜி நிரூபித்து வருகிறார். எழுபத்தொன்பது வயதான இந்தக் கிழவரின் சக்தி பெரும் மாயமாக இருக்கிறது. அது உலகத்தையே ஆட்டி வைத்து, உலக ஜனங்களின் மனத்தில் ஒரு புதிய சக்தியையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணுகிறது" என்று அந்தப் பத்திரிகை மகாத்மா காந்தியின் ஆத்ம சக்தியைப் பெரிதும் போற்றியிருக்கிறது.

"அரசியல் மேதாவிகளிடையே ஒரு முனிவராகவும் முனிவர்களிடையே ஓர் அரசியல் மேதாவியாகவும் திகழ்ந்துவரும் காந்திஜியின் ஆத்ம சக்தி, இந்தியாவுக்கு இணையற்ற ஒரு வரப்பிரசாதமாகும்" என்று பிரபல 'மாஞ்செஸ்டர் கார்டியன்' பத்திரிகை பாராட்டி யிருக்கிறது.

இவ்விதம் உலகம் முழுவதும் போற்றிப் புகழுமாறு மகாத்மா காந்தியின் உண்ணாவிரதம் சீக்கிரமாகவும் வெற்றிகரமாகவும் முடிந்திருப்பதைக் குறித்

துப் பாரத நாட்டு மக்கள் பரவசம் அடைவதில் ஆச்சரியமில்லை.

*　　　*　　　*

காந்திஜியின் உண்ணாவிரதத்தினால் உடனடியாக இரண்டு மகத்தான நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன :

1. பாகிஸ்தானில் உற்றார் உறவினரையும் உடைமைகளையும் பறி கொடுத்துவந்த அகதிகளின் ஆத்திரம் காரணமாக டில்லியில் குமுறிக்கொண்டிருந்த தீ அணைக்கப்பட்டது.

2. சென்ற வாரம் கராச்சியில் நடந்த படுகொலைகளின் விளைவாக இந்தியாவிலுள்ள பலவிடங்களிலும் மனக் கொதிப்பு ஏற்பட்டு வஞ்சம் தீர்க்கும் காரியங்கள் எதுவும் நடைபெறாமல் காப்பாற்றப் பட்டது.

இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுக்காக மகாத்மா காந்தி, மானிட வர்க்கத்துக்கே இன்றியமையாத, பொக்கிஷமான தமது உயிரைப் பணயம் வைக்கத் தயங்கவில்லை.

டாக்டர் சையது முகம்மது குறிப்பிட்டிருப்பது போல், எந்த மகாத்மா காந்தியை முஸ்லிம்களின் முதல் நெம்பர் விரோதியென்று ஜனுப் ஜின்னு கூறினரோ, அதே மகாத்மா காந்திதான் தாம் முஸ்லிம்களின் முதல் நெம்பர் நண்பர் என்பதை அன்றும் இன்றும் உலகம் ஒப்புக்கொள்ளுமாறு நிரூபித்திருக்கிருர்.

ஆனல் அதே சமயத்தில் பாகிஸ்தானில் நிகழ்ந் திருப்பதென்ன ?

கராச்சியிலும், பாகிஸ்தானிலிருந்து அகதிகள் பிரயாணம் செய்துவந்த ரயில் வண்டியிலும் ஆயிரக் கணக்கில் ஹிந்துக்களும் சீக்கியர்களும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுக்குப் பாதுகாப் பளிப்பதன்மூலம் சிறுபான்மையோர் பிரச்னையைச் சமாளிக்கக் காந்திஜியும் இந்திய சர்க்காரும் அல்லும் பகலும் இடைவிடாது பாடுபட்டு வருகின்றனர்.

பாகிஸ்தான் தலைவர்களோவென்றால் அங்குச் சிறுபான்மையோர் பிரச்னையையும் தங்களுடைய பொருளாதாரப் பிரச்னையையும் தீர்க்கக் குறுக்கு வழியொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அதாவது பாகிஸ்தானில் வகுப்பு வெறிக்குப் பலியானவர்கள் போக, பாக்கியிருக்கும் ஹிந்துக் களையும் சீக்கியர்களையும் இந்தியாவுக்கு விரட்டி யடித்து விட்டு, சிறுபான்மையோர் பிரச்னையைத் தீர்ப்பது; அவர்களுடைய சொத்துக்களைப் பாகிஸ் தான் சர்க்கார் ஆக்கிரமித்துக் கொள்ளுவதன்மூலம் தங்களுடைய பொருளாதார நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ளுவது ;—இவைதான் பாகிஸ்தான் சர்க்காரின் உத்தேசம் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

உதாரணமாக, சிந்து வியாபாரிகள் மாத்திரம் சுமார் ஐந்நூறு கோடி ரூபாய் பெறுமானமுள்ள தங்க

ளுடைய சொத்துக்களைப் பாகிஸ்தானில் விட்டுவிட்டு இந்தியாவுக்கு ஓடி வரும்படி நேர்ந்திருக்கிறது.

மேற்குப் பாஞ்சாலத்திலிருந்தும் எல்லைப்புற மாகாணத்திலிருந்தும் இந்தியாவுக்கு வந்து அடைக்கலம் புகுந்துள்ள அகதிகளுடைய சொத்துக்களின் பெறுமானம் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் ஆகிறது என்று நிபுணர்கள் மதிப்பிட்டிருக்கிருர்கள்.

* * *

காந்திஜி உண்ணுவிரதத்தை முடித்தபின் வெளியிட்டுள்ள ஒரு விஷயத்தைக் கவனிப்பவர்கள், பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள வகுப்பு வெறியின் தன்மையை அறிந்து கொள்ளலாம்.

அதாவது ஒரு முஸ்லிம் எழுதியுள்ள புத்தகத்தில் கீழ் வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதைக் காந்திஜி எடுத்துக் கூறியிருக்கிருர்.

"ஹிந்துக்கள் விஷப் பூச்சிகளையும்விட மோசமானவர்கள் என்று குரானில் கூறப்பட்டிருக்கிறது. எனவே அவர்களை அடியோடு ஒழித்துவிட வேண்டும். அவ்வாறு ஒழிப்பதில் கொஞ்சமும் பாவமில்லை. அது தான் ஆண்டவனுக்கு ஆனந்தத்தை அளிக்கும் கைங்கர்யமாகும். ஹிந்துக்களை ஒழிக்க எத்தகைய பலாத்கார முறைகளையும் கையாளலாம்; எவ்வித மோசடியும் செய்யலாம்."

பாகிஸ்தானில் நிகழ்ந்துவரும் சம்பவங்களைக் கவனிப்பவர்கள், மேற்படி விஷப் பிரசாரம் அங்கு

வேரூன்றிவிட்டதோ என்றே வருந்தவேண்டி யிருக்கிறது.

எனினும், காந்திஜி குறிப்பிட்டுள்ள அந்த விஷப் பிரசாரத்தை மௌலானா அபுல்கலாம் ஆஸாத் கடுமை யாகக் கண்டித்திருப்பதுடன், தமது கண்டனத்துக்கு ஆதாரமாகக் குரானிலிருந்தே சில வாக்கியங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

“மேற்படி பாழும் பிரசுரம் இஸ்லாம் மதத்தையே இழிவு படுத்துவதாக இருக்கிறது. அந்தப் புத்த கத்திலுள்ள விஷப் பிரசாரம் இஸ்லாத்துக்கே முற் றிலும் முரணாகும். ஜாதிமத பேதமின்றி மானிட வர்க்கத்தைச் சேர்ந்த சகலரும் சகோதரர்கள் என்றே குரான் உபதேசிக்கின்றது. அப்படியிருக்க, அதற்கு நேர்மாறாக எல்லோரையும் ஒழித்துவிட வேண்டு மென்று அந்தப் புத்தகத்தில் கூறியிருப்பதே, சமீப காலமாக ஒரு பிரிவினரைப் பிடித்து ஆட்டிவரும் வெறியைத் தூண்டியிருக்கிறதென்பது நன்கு தெரி கிறது” என்று மௌலானா ஆஸாத் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள வகுப்பு வெறியின் காரணத்தை விளக்கி யிருக்கிறார்.

* * *

பல முஸ்லிம் நாடுகளிலும், “யூதர்களையும் இந்தி யர்களையும் ஒழிக்கவேண்டும்” என்ற கூக்குரல் ஏற் பட்டு வருவதும் மேற்படி விஷப் பிரசாரத்தின் விளையே என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

எனினும் இந்த உண்மையை ஸர் ஜபருல்லா கான் தலைகீழாக மாற்றியிருப்பதுதான் வேடிக்கை யாகும்.

ஐக்கிய நாடுகள் சபையில் இந்திய சர்க்கார் பிரதி நிதியின் கண்யமான வாதத்துக்குப் பாகிஸ்தான் பிரதி நிதி ஸர் ஜபருல்லாகான் அளித்துள்ள பதிலைப் பாருங்கள். அதிலிருந்து பாகிஸ்தான் எத்தகைய படுமோசமான பொய்ப் பிரசாரத்திற்கும் துணிந்திருக் கிறது என்பது வெளியாகிறது.

இஸ்லாம் மதத்தினரை அடியோடு அழித்து ஒழித்து விடுவதே இந்தியாவின் நோக்கமாம்! அந்த நோக்கத்தை இந்தியா நிறைவேற்றியும் வருகிறதாம். முஸ்லிம்களை ஒழிப்பதற்காக இந்திய சர்க்கார் ஜனங் களுக்குப் பலவித ஆயுதங்களையும் கொடுத்திருக் கிறார்களாம்.

இவைபோன்ற அபாண்டமான கூற்றுக்களை ஜபருல்லாகான் சர்வதேச அரங்கத்தில் அள்ளி வீசி யிருக்கிறார்.

இந்தியாவிற்கு விரோதமாக அவர் அந்தச் சபை யில் ஆறு மணி நேரம் பொழிந்த வசைமாரியில் இன்னும் எத்தனையோ கலப்பற்ற புளுகுகள் அடங்கி யிருக்கின்றன.

இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் உயிரையும் உடைமையையும் காப்பாற்றித் தேசம் முழுவதும் அன்பும் அன்னியோன்யமும் நிலவுவதற்காகக் காந்திஜியும் இந்திய சர்க்காரும் அரும்பாடுபட்டு

வரும் சமயத்தில், ஜபருல்லாகான் போன்ற பிரமுகர்கள் அவ்வாறு கூறுவது பாகிஸ்தானுக்குப் பெருமையாகாது.

காஷ்மீரப் பிரச்னையை யொட்டிய வாய்ச் சண்டையை வளரவிடாமல் ஐ. நா. சபை ஒரு கமிஷனை நியமித்திருப்பது நல்ல காரியம்தான். அதன் மூலமாகவாவது, காஷ்மீரத்தில் படையெடுத்துள்ள கொலைகாரர்களின் அட்டூழியங்கள் நின்று அமைதியுண்டாக வழி பிறக்கட்டும்.

எது எப்படியாயினும் மகாத்மா காந்தியின் தவம் வீண்போகவில்லை.

டில்லியில் குமுறிக்கொண்டிருந்த வகுப்பு வெறி தீ அணைந்திருக்கிறது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தாங்கள் சகோதரர்கள் என்பதை உணர்ந்துகொண்டது மாத்திரமல்ல, அந்த உண்மையைத் தெருத் தெருவாகச் சென்று கோஷித்தும் வருகிறார்கள்.

முஸ்லிம்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காகக் காந்திஜி விதித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றவும், டில்லியில் மாத்திரமின்றி இந்தியா முழுவதும் வகுப்பு வேற்றுமையை ஒழித்து ஹிந்து-முஸ்லிம்களிடையே நிரந்தரமான சகோதரபாவத்தை உண்டுபண்ணுவதற்காகவும் காங்கிரஸ் அக்ராசனர் பாபு ராஜேந்திர பிரசாத்தின் தலைமையில் அந்தந்தச் சமூகத் தலைவர்களடங்கிய கமிட்டியும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானில் வகுப்பு வெறி அடங்குவதற்கு வழி பிறக்குமாயின், மேற்படி கமிட்டியின் அலுவல்கள் சுலபமாக நிறைவேறும்.

எனினும், இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் மீண்டும் வகுப்புக் கலகம் ஏற்படுமாயின் மறுபடியும் உண்ணாவிரதமிருக்கத் தாம் தயங்கப்போவதில்லை என்று காந்திஜி எச்சரிக்கை செய்துள்ளார்.

எனவே அவ்விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதை யாக இருந்து, மீண்டும் காந்திஜி உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும்படியான நிலைமைக்கு இடம் கொடுக் காமலிருக்க வேண்டியது இந்தியாவிலுள்ள முப்பது கோடி மகாஜனங்களின் கடமையாகின்றது.

அன்னியரின் ஆதிக்கத்தை எதிர்த்து அடிக்கடி உண்ணாவிரதம் இருக்கும்படியான நிர்ப்பந்தம் ஏற் பட்ட காந்திஜிக்குத் தம்முடைய தேச ஜனங்களின் தவறுகளுக்காகவும் உண்ணாவிரதம் இருக்கும்படி நேருவது சுதந்திர இந்தியாவின் கௌரவத்திற்குச் சிறிதும் ஏற்றதல்ல.

எனவே, சுதந்திர இந்தியாவில் காந்திஜி மூன் றுவது முறையாக உண்ணாவிரதம் இருக்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்படாமல் தவிர்க்க முஸ்லிம்கள் உள்பட இந்தியாவிலுள்ள சகலரும் முயற்சிக்க வேண்டும்.

---

*1948 ஜனவரி 25ந் தேதி கல்கி இதழ் தலையங்கம்.*

# ஜயந்தி கொண்டாடுகிறோம்

எந்தையே! சுதந்திர இந்தியாவின் தந்தையே! தீனர்களின் தெய்வமே! சத்தியத்தின் தஞ்சமே! எங்களை ஆட்கொண்ட அண்ணலே! பாபுஜி! இன்று அக்டோபர் 2ஆம் தேதி புனித தினத்தில் தாங்கள் இந்தப் பூவுலகில் பிறந்த திருநாளைக் கொண்டாடுகிறோம். சென்ற பல வருஷங்களாகக் கொண்டாடியது போல இன்றைக்கும் காந்தி ஜயந்தி கொண்டாடுகிறோம். ஆனால் இன்றைக்கு இந்த நேரத்தில், தாங்கள் எங்கே இருக்கிறீர்கள்? பரம பதத்தில் தேவ தேவனுடைய திருச் சந்நிதியில் வீற்றிருக்கிறீர்களா? சத்திய லோகத்தில் முனிபுங்கவர்களுக்குச் சத்தியாக்கிரஹ தத்துவத்தை எடுத்துரைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அவதார புருஷர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் இடையே அமர்ந்து அஹிம்சையின் பெருமையைப் போதித்துக் கொண்டிருக்கிறீர்களா? அடிகளே? அநாதைகளின் கடவுளே! தாங்கள் எங்கே இருக்கிறீர்கள்? இந்த நேரம் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

அல்லது ஒரு வேளை இந்தப் புண்ணிய பாரத பூமியை விட்டுப்போக மனமின்றி, சூக்ஷ்ம சரீரத்தில் இங்கேயே வட்டமிட்டு வளைய வந்து கொண்டிருக்கிறீர்களா? அரும்பாடுபட்டு அஹிம்சைப் போர் நடத்தி இந்தப் பாரத நாட்டுக்குச் சுதந்திரம் பெற்று அளித்தீர்களே? அந்தச் சுதந்திரத்தை இந்திய

மக்கள் சரிவரப் பாதுகாத்து வருகிருர்களா என்று பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா?

தேசியத் தற்கொலேக்கு ஒப்பான சகோதரச் சண்டை போட்டுக் கொண்டிருந்தோமே? அதைத் தடுத்து நிறுத்தும் பொருட்டுத் தங்கள் அரிய உயிரைப் பலி கொடுத்தீர்களே? அதற்கு ஏதேனும் பலன் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா?

அப்படியாளுல் தங்கள் உள்ளம் ஓரளவு திருப்தியடைந்திருக்க வேண்டும். தாங்கள் பெற்றளித்த சுதந்திரத்தை நாங்கள் பாதுகாத்துக் கொண்டுதான் வருகிரேம். தங்களுடைய உத்தமச் சீடர்கள்—எங்களுடைய தலைவர்கள்—எத்தனையோ இன்னல்களுக் கிடையில் இந்தியாவின் சுதந்திரத்தை நிலை நாட்டிக்கொண்டு வருகிருர்கள்.

தங்களுடைய மகா தியாகமும் வீண்போய் விடவில்லை. சகோதரனைச் சகோதரன் கொல்லத் தூண்டிய மூட வெறி நாட்டிலிருந்து அகன்றுவிட்டது. படுபாதகனுடைய துப்பாக்கிக் குண்டுக்குத் தாங்கள் பலியான தினத்திலிருந்து தேசத்தில் சமூகக் கலவரங்கள் நின்றே போய்விட்டன. வகுப்புத் துவேஷ வெறி தணிந்து கொண்டுதான் வருகிறது.

மகாத்மாஜி! தாங்கள் இந்தப் புண்ணிய பாரத நாட்டின் வானிலேயே இன்னும் உலாவிக் கொண்டிருக்கும் பட்சத்தில் சமீபத்திலே நடந்த ஹைதராபாத் சம்பவங்களைப்பற்றியும் அறிந்திருப்பீர்கள்.

இந்திய அரசாங்கப் பொறுப்பை வகிக்கும் தங்களுடைய உத்தமச் சீடர்கள் எவ்வளவோ பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள். ஆனால் ரஸாக்கர்கள் என்னும் கலியுக அரக்கர்களின் அக்கிரமங்கள் குறைவதாக இல்லை. எனவே, கடைசியாக, தாங்கள் இன்று எங்கள் மத்தியில் இருந்தாலும் ஒப்புவீர்கள் என்று நம்பி இந்திய வீர சைனியத்தை அனுப்பினார்கள். ஐந்தே நாளில் இந்தியாவின் சைனியம் செய்த சாகஸச் செயல் சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்டது.

இராணுவ நடவடிக்கைதான் என்றாலும், உயிர்களுக்குச் சேதம் எத்தனை குறைவு என்று நினைத்தால் அதிசயமாயிருக்கிறது.

தங்களுடைய அஹிம்சா தர்மத்தின் மகிமையும் மகா தியாகத்தின் பலனும் வேறொரு விதத்திலும் நன்கு வெளியாகி யிருக்கின்றன.

இந்தியாவின் விரோதிகள் எல்லாரும் என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள்? பாகிஸ்தானிகளும் பிரிட்டிஷ்காரர்களும் என்ன சொன்னார்கள்? பிரிட்டிஷ் பத்திரிகை நிருபர்கள் என்ன செய்தி அனுப்பினார்கள்? பி. பி. சி. என்னும் பிரிட்டிஷ் ரேடியோ எத்தகைய படுபாதகமான ஊக ஜோசியத்தை வெளியிட்டது?

இந்திய சைனியம் நைஜாம் ராஜ்யத்தில் பிரவேசித்ததும் இந்தியாவெங்கும் வகுப்புக் கலவரங்கள் தலைவிரித்தாடும் என்று சொன்னார்கள். ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டும் இருந்தார்கள்.

அவர்களுடைய ஆசையில் மண் விழுந்தது. ஆரம்ப தினங்களில் கலவரம் ஒன்றும் நடக்கவில்லை யென்ருலும் அவர்கள் ஆசை இழந்து விடவில்லை. "இந்தியத் துருப்புகள் ஹைதராபாத் நகரில் பிரவேசித்ததும் கலகங்கள் ஆரம்பமாகும்" என்று சொன்ஞர்கள். அப்படியும் நடக்கவில்லை. குமரி முனையிலிருந்து இமயமலை வரையில் இந்தப் புண்ணிய நாட்டிலே அமைதி குடிகொண்டிருந்தது. துவேஷ அடிப்படை கொண்ட பாகிஸ்தானிலேகூட அமைதி நிலவிற்று.

காந்திஜி! இது தங்களுடைய மகா தியாகத்தின் சிகரம் போன்ற பலன்தான் என்பதில் சந்தேகம் என்ன?

அஹிம்சா மூர்த்தியே! அன்பின் உருவமே! சத்திய தேவதையின் அவதாரமே! தாங்கள் உயிர் வாழ்ந்தபோது தங்கள் உபதேசங்களைக் கடைப் பிடித்ததைக் காட்டிலும் இப்போது அதிகமாகக் கடைப்பிடிக்க முயன்று வருகிருேம். இந்த உறுதி எங்களுக்கு என்றென்றும் நீடித்திருக்க வேண்டும் என்று ஆசி கூறுங்கள்!

காந்தியடிகளே! தங்களை வணங்குகிருேம். வாழ்த்துக் கூறுகிருேம். தங்களுடைய புனித ஞாபகத்தைப் போற்றுகிருேம்.

சென்ற இருபத்தெட்டு வருஷமாக அக்டோபர் மாதம் 2ஆம் தேதி காந்தி ஜயந்தி கொண்டாடி வந்திருக்கிருேம். அப்போதெல்லாம் தாங்கள் இந்த மண்ணுலகில் பூதஉடல் தாங்கியிருந்தீர்கள். ஆகையால் குதூகலத்துடன் கொண்டாடினேம். இந்தப்

பாரத பூமியில் எங்கோ ஓரிடத்தில் தாங்கள் சஞ்சரிக் கிறீர்கள், நாங்கள் நடமாடுகிற மண்ணில் தங்க ளுடைய திருப்பாதங்களும் நடமாடுகின்றன என்ற எண்ணத்துடன் அப்போதெல்லாம் ஆனந்தமாய் கொண்டாடினோம்.

ஆனால் இன்றோ? தாங்கள் இந்த மாநிலத்தில் நடமாடவில்லை. தங்களுடைய புனிதத் திருமேனியை அக்கினிதேவன் சாம்பராக்கிப் பரிசுத்தமடைந்ததை நாங்கள் அறிவோம். தங்களுடைய உடலின் துகளை, உடல் எரிந்து உண்டான புனித சாம்பரை, நாடெங்கு முள்ள நதி கட்டங்கள், சமுத்திர கட்டங்கள் ஆகிய புண்ணிய தீர்த்தங்களில் கரைத்து விட்டதையும் அறிவோம். ஆயினும், எம்மானே! தாங்கள் இறந்து விட்டதாக எங்களால் நம்பமுடியவில்லை. இன்னமும் தாங்கள் இங்கு எங்கேயோ வட்டமிட்டுக் கொண் டிருப்பதாயும், எங்களுடைய செய்கைகளைக் கவனித்து வருவதாயும் எண்ணிக்கொண்டுதான் இந்த வருஷத் திலும் காந்தி ஜயந்தி கொண்டாடுகிறோம்.

பாபுஜி! எங்களுக்கு ஆசி கூறுங்கள். பாரத நாட்டிற்கு ஆசி கூறுங்கள். உலகில் காந்தீயம் வளர்ந்து பரவுமாறும் காந்தி தர்மம் செழித்தோங்கு மாறும் ஆசி கூறுங்கள். தங்களைத்தவிர அவ்விதம் ஆசி கூறக் கூடியவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்?

---

*1948 அக்டோபர் 2ந் தேதி கல்கி இதழ் தலையங்கம்.*

## நினையாத நெஞ்சு உண்டோ?
## உருகாத உள்ளம் உண்டோ?

வருஷம் ஒன்று ஆகிவிட்டது! மாதங்கள் பன்னிரண்டு சென்றுவிட்டன! நாட்கள் முந்நூற்று அறுபத்தைந்து ஓடிப்போய் விட்டன! எனினும் சென்ற வருஷம் ஜனவரி மீ 30உ நம் நெஞ்சிலே சுட்ட புண் இன்னும் ஆறவில்லை; அன்று நம் அறிவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி இன்னும் மாறவில்லை; அன்றைக்கு நம் இதயத்தில் உண்டான துயரம் இன்னும் தீரவில்லை.

ஓர் ஆண்டு முழுமையாகச் சென்றுவிட்டது. ஆயினும் சென்ற ஜனவரி மீ 30உ புது டில்லியில் நிகழ்ந்த அந்தப் பயங்கரச் சம்பவத்தைப்பற்றி நேற்று நடந்ததுபோல் நினையாத நெஞ்சு உண்டோ? நினைந்து நினைந்து உருகாத உள்ளம் உண்டோ?

*   *   *

உலக சரித்திரத்தில் பிரதான புருஷர்கள் விஷயத்திலும் உலக மகா காவியங்களின் கதாநாயகர்களின் விஷயத்திலும் சிற்சில முக்கியமான ஒற்றுமைகளைக் காணலாம். மனித குலத்துக்கு வாழ்வு அளிக்க வந்தவர்கள் எப்போதும் தங்கள் வாழ்க்கையில் பெரும் கஷ்டங்களை அநுபவித்திருக்கிறார்கள். இராமர் காட்டுக்குச் சென்று சீதையைப் பறிகொடுத்துத் துன்ப முற்றார். கிருஷ்ணன் பிறந்த உடனேயே வேறிடம் சென்று மறைந்து வாழ்ந்தான். பஞ்சபாண்டவர்கள்

வனவாசமும் அஞ்ஞாத வாசமும் செய்தார்கள். பாலன் பிரஹ்லாதன் சொல்ல முடியாத கொடுமைகளுக்கு உள்ளானுன். கௌதம புத்தர் தாமே தேடிச் சென்று கடுமையான தவ வாழ்க்கையை மேற்கொண்டு அநுபவித்த கஷ்டங்களை அறியாதவர் யார்? முகம்மது நபி ஒரு சமயம் அவருடைய சொந்த ஊராகிய மக்காவை விட்டு மதீனுவுக்கு ஓடும்படி நேர்ந்தது.

உலகம் உய்யப் பிறந்த மகான்கள் சிலருடைய வாழ்க்கை முடிவு நெஞ்சு பதைக்கக் கூடிய சோக சம்பவமாக நேர்ந்திருக்கிறது.

அன்பு வழியைப் போதித்தருளிய ஏசுநாதர் தாம் பிறந்த நாட்டு மக்களின் தூண்டுதலினுல் சிலுவையில் அறையப்பட்டார்.

அடிமைப்பட்டிருந்த பிரஞ்சு தேசத்துக்கு விடுதலை அளித்த ஜோன் ஆப் ஆர்க் என்னும் வீரப் பெண்மணியைக் கிருஸ்துவ சிரேஷ்டர்கள் சூனியக்காரி என்று கூறி உயிரோடு வைத்துக் கொளுத்திஞர்கள்.

உலகத்திலிருந்து அடிமைத்தனம் என்னும் பயங்கர இழிவைப் போக்கிய உத்தமர் ஆப்ரஹாம் லிங்கன் அவருடைய சொந்த நாட்டுப் பாதகன் ஒருவனுல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உலகத்தின் உத்தம புருஷர்கள் ஒன்று வாழ்க்கையில் பெரும் கஷ்டங்களை அநுபவித்திருக்கிருர்கள்; அல்லது அவர்களுடைய வாழ்க்கையின் முடிவு சோகத்துக்குரியதாகி யிருக்கிறது.

ருஷ்யா தேசத்து மகானுகிய டால்ஸ்டாயைப் போலப் பிரான்ஸ் தேசத்தில் ஒரு மகான் பிறந்து நம் காலத்தில் வாழ்ந்திருந்தார். அவர் பெயர் ரோமேன் ரோலண்டு. தென்னுப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் காந்தி மகாத்மா நடத்திய அஹிம்சைப் போரைக் குறித்து அவர் கேள்விப் பட்டார். மகாத்மாவின் வாழ்க்கை வரலாற்றை நன்கு தெரிந்து கொண்டார். தெரிந்துகொண்டு மகாத்மா காந்தியைக் குறித்து 1923ஆம் வருஷத்தில் பிரஞ்சு பாஷையில் ஒரு நூல் எழுதினுர். அது ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துப் பிரசுரிக்கப்பட்டது.

அந்த அருமையான புத்தகத்தை முடிக்கும் போது, கடைசிப் பாராவுக்கு முதல் பாராவில் ஸ்ரீ ரோமேன் ரோலண்டு எழுதியிருக்கிருர்: This is Gandhi's message. The only thing lacking is the Cross." ("இதுவே காந்தியின் போதனை. குறைவுபடும் ஒரே ஒரு விஷயம் சிலுவைதான்!")

ஸ்ரீ ரோமேன் ரோலண்டு 1923ஆம் ஆண்டில் மேற்கண்டவாறு எழுதினுர்.

"இவ்வளவு பெரிய மகா புருஷராயிருக்கிருரே காந்திஜி! இத்தகைய அருமையான உபதேசத்தை மனித குலத்துக்கு அளித்திருக்கிருரே! இப்படிப்பட்ட உத்தம புருஷரை இந்த உலகம் சும்மா விட்டுவிடுமா? மனிதர்கள் சும்மா விட்டு விடுவார்களா? ஏசுவைச் சிலுவையில் அறைந்தது போல் இவரையும் கொல்லாமல் விட்டு விடுவார்களா?" என்று

ஸ்ரீ ரோமேன் ரோலண்டு அதிசயப்பட்டு அம்மாதிரி எழுதினர்.

அவர் அதிசயப் பட்டிருக்க வேண்டியதில்லை என்று இப்போது தீர்ந்து போய்விட்டது! அவர் எழுதி இருபத்தைந்து வருஷத்துக்குப் பின்னால், அவர் குறிப்பிட்ட ஒரே ஒரு குறையும் நிவர்த்தியாகிவிட்டது! மனித சமூகத்தின் கொடுமைப் பரம்பரை இன்னும் மாறவில்லை யென்று தெளிவாகி விட்டது! மனித குலத்தில் பிறந்த சண்டாளப் பாதகன் ஒருவன் மகாத்மாவைச் சுட்டுக் கொன்றுவிட்டான்!

* * *

உலகம் உய்யப் பிறந்த உத்தமரைக் கொன்ற பெரும் பழி நம்முடைய காலத்தில் மனித குலத்துக்கு மறுபடியும் வந்துவிட்டது.

ஆனாலும் மனிதகுலத்தைப்பற்றி நமக்கு அடியோடு நம்பிக்கை யில்லாமல் போய்விடவில்லை.

மனித சமூகம் அபிவிருத்தியடைந்து கொண்டு தான் வருகிறது.

ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டபோது அவருடன் இரவைக் கழிப்பதற்கு முன்வந்தவர்கள் ஒரு சில பெண்மணிகள் தான்.

ஆனால் மகாத்மாவை ஒரு பாதகன் சுட்டுக் கொன்ற மறுநாள் அவருடைய உடலைத் தகனம் செய்த இடத்துக்கு இருபது லட்சம் ஜனங்கள் கதறிக் கொண்டு சென்றார்கள்.

அவருடைய புனித அஸ்தியைக் கரைத்த இடத்திற்கு நாற்பது லட்சம் ஜனங்கள் சென்று கண்ணீரும் கம்பலையுமாக நின்ருர்கள்.

மகாத்மா கொல்லப்பட்டார் என்னும் செய்தியைக் கேட்டவுடன் நானிலத்து மக்கள் எல்லாம் நெக்குருகினர்கள்.

வருஷம் ஒன்று ஆகிவிட்டது. இன்றைக்கு மறுபடியும் பாரத நாடெங்கும், பூவுலகமெங்கும், மக்கள் மகாத்மாவின் வாழ்வையும் முடிவையும் நினைந்து உள்ளமுருகி நிற்கிருர்கள்.

மனித சமூகம் அன்பு வழியில்—அஹிம்சா மார்க்கத்தில் முன்னேற்ற மடைந்து வருகிறது; சந்தேகமில்லை.

* * *

ஸ்ரீ ரோமேன் ரோலண்டு, அவருடைய புத்தகத்தின் கடைசிப் பாராவில் சொல்லுகிருர்: "இரண்டில் ஒன்று நேருவது நிச்சயம். ஒன்று மகாத்மா காந்தியின் ஆத்ம சக்தி இந்த நாளிலேயே வெற்றியடையும்; அல்லது அந்த ஆத்ம சக்தி பல நூறு வருஷங்களுக்கு முன்னல் புத்தராகவும் ஏசுவாகவும் தோன்றியதுபோல், மறுபடியும் இப்பூவுலகில் மனித உருக்கொண்டு அவதரிக்கும். தெய்வ அம்சம் பொருந்திய அந்த அவதாரத்தின் சக்தியானது மனித குலத்தை அன்புவழியில் கொண்டு சேர்க்கும்.

காந்தி மகானின் ஆத்ம சக்தி இந்த நாளிலேயே வெற்றியடைந்திருக்கிறது என்றே நாம் கருதுகிறோம்.

நம் கண்ணுக்கும் அறிவுக்கும் புலனுகாத முறைகளில் அந்த ஆத்ம சக்தி மனித குலத்தை அன்புவழியில் சேர்ப்பித்துக்கொண்டு வருவதாகவே நம்புகிருேம்.

* * *

தற்காலத்தில் உலகத்தில் வாழும் தலைசிறந்த தத்துவ ஞானிகளில் ஐன்ஸ்டீன் என்பவர் ஒருவர். அவர் காந்தியடிகளைப்பற்றிக் கூறியிருக்கிருர் :

**" இத்தகைய ஒருவர் மானிட வடிவத்திலே வந்தார் என்றும் இந்தப் பூவுலகத்தில் அவர் நடந்தார் என்றும் இனிமேல் வரப்போகும் மானிட சந்ததிகள் நம்புவதே கஷ்டந்தான் !"**

இவ்விதமாக வருங்காலச் சந்ததிகள் நம்புவதற்கரிய மகிமை பொருந்திய மகா புருஷர் பிறந்த நாட்டில் நாமும் பிறந்தோம். அவர் பாதம் பட்ட புண்ணிய பூமியில் நாமும் நடந்தோம். அவர் உயிர் வாழ்ந்த காலத்திலேயே நாமும் வாழ்ந்தோம்; அவரைக் கண்குளிரத் தரிசித்தோம்; அவருடைய உபதேசங்களைச் செவி குளிரக் கேட்டோம். இந்தப் பாக்கியங்களுக்கெல்லாம் தகுதியுடையவர்கள் நாம் என்று நமது நடத்தையினுல் நிரூபிப்போமாக.

புனித தினமான ஜனவரி 30உ ஒவ்வொருவரும் ஆத்ம பரிசோதனை செய்து கொள்வோமாக. கோப தாபங்களையும் மதமாற்சரியங்களையும் போக்கிக் காந்தி மகான் காட்டிய அன்பு நெறியைக் கடைப் பிடிப்போமாக!

---

*1949 ஜனவரி 30ந் தேதி கல்கி இதழ் தலையங்கம்.*

# உலகுக்கு ஒரு ஜோதி

சொல்லினில் அடங்குவதில்லை! நினைவுக்குள் நிற்பதில்லை; கற்பனைக்கு எட்டுவதில்லை—காந்தி மகாத்மாவின் பெருமை.

கவிதை திகைக்கிறது; காவியம் திணறுகிறது; கலைகள் தலை வணங்குகின்றன—காந்தியடிகளின் அற்புத சரிதத்தை எண்ணி.

இமயத்தைக் காட்டிலும் உயர்ந்து நின்றவர்; கங்கை நதியைக் காட்டிலும் புனிதமானவர்; சூரியனை விடத் தேஜஸ் படைத்தவர்; தாயைக் காட்டிலும் கருணை உள்ளவர்; கடவுளைப்போல் நம்மைக் காக்க வந்தவர்; சத்தியத்தைப் போலச் சலியாது நின்றவர்; —உலகம் போற்றும் உத்தமர்.

பாரத புண்ணிய பூமியில் இன்றைக்கு எண்பது வருஷங்களுக்கு முன்னால் அவர் பிறந்தார். 1869 ஆம் வருஷம் அக்டோபர் மீ 2உ இந்த உலகத்தை உய்விக்க அவதரித்தார். அந்தப் புனித தினத்தை இன்று நாடெங்கும் கொண்டாடுகிறோம்.

பாரத நாட்டில் இதற்கு முன்னால் இரண்டு அவதார புருஷர்களுடைய பிறந்த நாளைத்தான் தேசமெங்கும் கொண்டாடுவது வழக்கம். ஸ்ரீ ராமபிரான் அவதரித்த ராமநவமி உற்சவம் கொண்டாடுகிறோம். ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஜன்மம்

தரித்த கோகுலாஷ்டமி அல்லது கிருஷ்ண ஜயந்தியைக் கொண்டாடுகிறோம்.

ஸ்ரீ ராமபிரான் கையில் கோதண்டம் ஏந்தி இராவணாதி ராட்சதர்களை வதம்செய்து மக்களைக் காப்பாற்றினார்.

ஸ்ரீ கிருஷ்ண பகவானே பூதகி, சகடாசுரன் முதல் கம்ஸன், ஜராசந்தன், சிசுபாலன், தந்தவக்ரன் வரையில் பல அசுரர்களையும் கொடுங்கோலர்களையும் வதம் செய்து சாது ஜனங்களை ரட்சித்து அருளினார்.

இவையெல்லாம் இதிகாசங்களில் நாம் படித்தவை. இந்த நிகழ்ச்சிகளைப் பரம்பரை பரம்பரையாக உண்மை என்று நம்பி ராமநவமியும், கிருஷ்ண ஜயந்தியும் கொண்டாடி வருகிறோம்.

நம்முடைய காலத்தில், நம் கண்முன்னே நடமாடிய அவதார புருஷர் மகாத்மா காந்தி. இவர் பாரத மக்களை அடிமைத்தனம் என்னும் கொடிய பூதத்தின் வாயிலிருந்து காப்பாற்றினார். தீண்டாமை என்னும் ராட்சதன், மதுபான மென்னும் அரக்கன், அறியாமை என்னும் காட்டேரி ஆகியவர்களிடமிருந்து நம்மைக் காந்திமகான் ரட்சித்து அருளினார்.

ஸ்ரீ ராமர் கோதண்டம் ஏந்தினார் ; ஸ்ரீ கிருஷ்ணன் சக்ராயுதம் தரித்தார் ; ஆனால் காந்தி மகாத்மாவோ பலாத்கார ஆயுதங்களை அடியோடு புறக்கணித்து அஹிம்சையாகிய வில்லையும், சத்தியமாகிய சக்கரத்தையும் தரித்துப் பாழ்பட்டு நின்ற பாரத தேசந்தன்னை

அடிமைத்தனம் முதலிய அரக்கர்களிடமிருந்து காப்பாற்றிப் பாரத மக்களுக்கு வாழ்வை அளித்தார்.

அத்தகையவர் அவதரித்த தினத்தை இன்று கொண்டாடுகிறோம்.

அமரர் பிறந்த தினம் என்ற குதூகலத்தோடு அவருடைய புனிதத் திருமேனி மறைந்து விட்டதே என்ற ஆதங்கம் போட்டியிடக் காந்தி மகாத்மாவின் ஜயந்தி கொண்டாடுகிறோம்.

* * *

ஒருவர் நமக்கு ஒரு உதவி செய்தால் அதை உயிர் உள்ளவரைக்கும் மறக்கக்கூடாதென்பது மனித குலத்தின் தர்மம். மக்களில் உயர்ந்தோர் அனைவரும் இந்தத் தர்மத்தை வற்புறுத்தி யிருக்கிறார்கள்.

> ''தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணை யாய்க்
> கொள்வர் பயன் தெரிவார்!''

என்று தமிழ்மறை சொல்லுகிறது.

காந்தி மகாத்மா நமக்குச் செய்திருக்கும் நன்றி தினைத்துணையானதா? அற்ப சொற்பமானதா? அதற்கு ஈடு, இணை சொல்ல வேறு ஒன்று உண்டா?

''இந்தியாவில் உள்ள முப்பது கோடி மக்களை யும் முப்பது கோடி புழுக்களாக மதிக்கிறார்களே அயல் நாட்டார்?'' என்று சுவாமி விவேகானந்தர் அன்று கதறினர்.

காந்தி மகாத்மா தோன்றி இந்திய மக்களை அந்த நிலையிலிருந்து உயர்த்தினர். மாநிலத்தில் நம்மை மனிதர்கள் ஆக்கினர். உலக சரித்திரத்தில் கண்டும் கேட்டும் அறியாத அஹிம்சா தர்ம முறையினல் பாரத நாடு சுதந்திரம் பெறச் செய்தார். இதன்மூலம் பாரத தேசத்தை உலகத்துக்கே வழி காட்டும் ஜோதியாக விளங்கச் செய்தார்.

அத்தகைய மகா புருஷரை நாம் மறக்க முடியுமா? அவர் நமக்குச் செய்த நன்றியைத்தான் மறக்க முடியுமா? அப்படி நாம் நன்றி மறக்கவில்லையென்பதற்கு அறிகுறி ஏதேனும் வேண்டாமா? பாரத நாட்டில் இனி வாழையடி வாழையாகப் பிறக்கப் போகும் சந்ததிகள் எல்லாரும் காந்தி மகானை நன்றியுடன் நினைந்து போற்றும்படி செய்யும் ஞாபகச் சின்னங்கள் நாடெங்கும் வேண்டாமா?

* * *

காந்தி மகானுக்கு நாம் செலுத்தக்கூடிய நன்றி அவர் காட்டிய வழியில் நடப்பது; அவர் போதித்த உபதேசங்களைக் கடைப்பிடிப்பது; அவர் ஆரம்பித்து நடத்திய தொண்டுகளைத் தொடர்ந்து நடத்துவது—இதில் சிறிதும் சந்தேகமில்லை.

இந்த முறைகளைக் கடைப்பிடிக்கும்படி நம்மை அடிக்கடி தூண்டுவதற்குச் சில சாதனங்கள் வேண்டும்.

மக்கள் மறதியுள்ளவர்கள்; வாழ்க்கைப் போரில் ஈடுபட்டவர்கள்; பலவிதக் கவலைகளால் சூழப்பட்டவர்கள்.

நல்ல காரியங்களை, அவசியமான காரியங்களைச் செய்வதற்குக்கூட, நமக்கெல்லாம் அடிக்கடி ஞாபகப் படுத்துவதும், தூண்டுகோல் இடுவதும் அவசியமாகும்.

ஆகையினாலேதான் காந்திமகானைப் போன்ற அவதார புருஷருக்கும் ஞாபகச் சின்னம் அவசிய மாகிறது.

* * *

எங்கும் நிறைந்த இறைவனுக்கு இந்துக்கள் ஆலயங்கள் எடுத்துச் சிலைகளைப் பிரதிஷ்டை செய்து பூஜிக்கிறார்கள். கோயிலிலே கல்லிலேதான் கடவுள் இருக்கிறார் என்ற எண்ணத்தினால் அல்ல; சலன முள்ள மனிதனுடைய மனம் இறைவனிடம் குவிந்து ஈடுபடச் சின்னங்கள் தேவை என்று கண்டுதான் இந்துக்கள் கோயில்கள் கட்டி விக்கிரகங்களை வைத்துக் கும்பிட்டு வணங்குகிறார்கள்.

எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல ஆண்டவனைத் தொழுவதற்குக் கிறிஸ்துவர்கள் வானளாவிய கோபு ரங்களை உள்ள சர்ச்சுகளைக் கட்டுகிறார்கள்.

விக்கிரக ஆராதனையை அடியோடு வெறுக்கும் முஸ்லிம் மதத்தாரும் அல்லாவைத் தொழுவதற்கு மசூதிகளைக் கட்டுகிறார்கள்.

கடவுளை நினைவூட்டுவதற்குச் சாதனங்கள் தேவை என்றால், அவதார புருஷர்களையும் மகா புருஷர்களையும் நினைவூட்டுவதற்குச் சாதனங்கள் இன்றியமையாது வேண்டியவையாகும். பெரியவர்

களுடைய பிறந்த நாளையும் இறந்த நாளையும் கொண்டாடுவதும், நினைவு மலர்கள் வெளியிடுவதும், ஞாபகச் சின்னங்கள் எழுப்புவதும் எதற்காக? இவை எல்லாவற்றின் அடிப்படையான நோக்கமும் ஒன்றுதான். மகான்களை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்வதன்மூலம் அவர்களுடைய போதனைகளைக் கடைப்பிடித்து நடக்கத் தூண்டுதல் ஏற்படும் என்பது தான்.

* * *

வீரர்களுக்கும் மகான்களுக்கும் ஞாபகச் சின்னங்கள் எழுப்பித் திருவிழாக் கொண்டாடும் தேசங்கள் உலகத்தில் மகோன்னத நிலையை அடைந்திருப்பதைக் காணலாம்.

அமெரிக்காவுக்குச் சுதந்திரம் அளித்த வாஷிங்டனுக்கும், அடிமைத்தனத்தை ஒழித்த ஆப்ரஹாம் லிங்கனுக்கும் மகத்தான ஞாபகச் சின்னங்களை எழுப்பியிருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் நெல்ஸனுக்கும் வில்லிங்டனுக்கும் கிராம்வெல்லுக்கும் கிளைவுக்கும்கூட ஞாபகச் சின்னங்கள் எழுப்பியிருக்கிறார்கள்.

பிரான்ஸ் தேசத்தில் வீரன் நெப்போலியனுக்கு இணையில்லாத ஞாபகச் சின்னம் இருக்கிறது.

ருஷ்யாவில் லெனினுக்குப் பிரமிக்க வைக்கும் பிரமாண்டமான ஞாபகச் சின்னம் நிறுவியிருக்கிறார்கள்.

பாரத புண்ணிய பூமியில் பிறந்த மகாத்மா வீரருக்குள் வீரர்; மகான்களுக்குள்ளே மகான்; ஞானி

களுக்குள்ளே பரமஞானி; பக்தரிலே பரம பக்தர்; தொண்டருக்குள்ளே தொண்டர்; தலைவருக்குள்ளே தலைவர்; சென்ற இரண்டாயிரம் ஆண்டு காலத்தில் பாரத தேசத்தில் இத்தகைய ஒரு மகாபுருஷர் அவதரித்ததில்லை.

அப்படிப்பட்ட மகாத்மா காந்திக்குத் தேசமெங்கும் தகுந்த ஞாபகச் சின்னங்கள் ஏற்படவேண்டும்.

கல்கத்தாவிலும் பம்பாயிலும் காந்தி மகானுக்கு ஞாபகச் சின்னம் நிறுவி விட்டார்கள்; புது டில்லியில் மாபெரும் ஞாபகச் சின்னம் கட்டப்போகிருர்கள்.

நாகர்கோயிலில் நமது கலைவாணர் ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் அவர்களுடைய சொந்த முயற்சியினுல் காந்தி மகாத்மாவின் ஞாபகார்த்த ஸ்தூபி கம்பீரமாக எழுந்து நிற்கிறது.

சென்னை மாகாணம் மட்டும் பின் நிற்கலாமா? சென்னை நகரில் மகாத்மா காந்திக்குத் தக்கதொரு ஞாபகச் சின்னம் வேண்டாமா? இந்தச் சென்னை மாகாணத்தின்பேரில் மகாத்மா காந்தி ஒப்பற்ற பேரபிமானம் வைத்திருந்தாரே? மகாத்மாவின் திரு உள்ளத்தில் சத்தியாக்கிரஹ இயக்கம் நடத்தும் முறை உதயமானது இந்தச் சென்னை நகரிலேயே அல்லவா?

* * *

காந்தி மகாத்மா அமரத்வம் அடைந்த சமயத்தில் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் சென்னை மாகாணப் பிரதம மந்திரியாயிருந்தார்.

என்பது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். காந்தி மகானுடைய திருமேனியின் அஸ்தி பல இடங்களுக்குச் சென்றதுபோல் சென்னைக்கும் வந்தது. சென்னைக் கடலிலும் மற்றும் பல புண்ணிய தீர்த்தங்களிலும் கரைக்கப்பட்டது. மிகுத்திருந்த அஸ்தியைக் கலசத்தோடு சேர்த்து வைத்து ஓமந்தூர் ரெட்டியார் பூஜை செய்து வந்தார். சென்னையில் தக்கதொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த அஸ்தி கலசத்தைப் புதைத்து அதன்பேரில் காந்தி மகாத்மாவின் ஞாபகார்த்தமாக ஒரு ஸ்தூபி கட்டவேண்டுமென்பது ஓமந்தூர் ரெட்டியாரின் விருப்பம். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் சென்னை சர்க்கார் சிரத்தை கொண்டிருக்கிறார்கள். பிரதம மந்திரி ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்களும், மராமத்து மந்திரி கனம் பக்தவத்ஸலம் அவர்களும் சென்னையில் பல இடங்களைப் பார்வையிட்டுக் கடற்கரையில் சர்வகலாசாலைக் கட்டிடங்களுக்கு எதிரில் அத்தகைய மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபியைக் கட்டுவது என்று முடிவு செய்து அதற்கு வேண்டிய அளவு இடம் அளிக்க உத்திர விட்டிருக்கிறார்கள்.*

மந்திரிகள் பொறுக்கியிருப்பது மிகவும் பொருத்தமான இடம். எழுபத்தொன்பது அடி உயரமான ஸ்தூபி எழும்போது அதன் சிகரத்தை ஹைகோர்ட்டிலிருந்தும் பார்க்கலாம்; மயிலாப்பூரிலிருந்தும் பார்க்கலாம்.

---

* ராஜாஜி கூறிய யோசனைக்கு இணங்க கிண்டி ராஜ பவன் தோட்டத்தில் காந்தி மகானின் ஞாபகார்த்தமாகப் பிரார்த்தனை மண்டபம் எழுப்புவது என்று பின்னர் தீர்மானிக்கப்பட்டது.

அக்டோபர் 2ந் தேதி மகாத்மா பிறந்த தினமும், ஜனவரி மாதம் 30ந் தேதி காந்தி அமரரான தினமும் கொண்டாடப்படும்போது மகாத்மா ஸ்தூபியை அடுத்து அலைகடலின் ஓரம் வரையில் பதினாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து பிரார்த்தனை செய்ய விஸ்தாரமாக இடம் இருக்கும்.

ஸ்தூபியின் அடிப்புறத்தை எட்டுப் பக்கங்கள் உள்ளதாக அமைத்து மகாத்மாவின் மணி மொழி களில் முக்கியமானவற்றைப் பொறுக்கி ஏழு பக்கங் களில் பொறிப்பது என்றும் நீலக்கடலை நோக்கியுள்ள பக்கத்தில் காந்தி மகானுடைய திருமுகம் பொலியச் செய்வது என்றும் திட்டமிட்டிருக்கிறது. காந்தி மகாத்மாவின் உபதேசச் சின்னங்களாகிய இராட்டை, கைக்கதிர், பகவத்கீதை, பசு ஆகியவற்றை ஸ்தூபத் தின் அடிப் பகுதியில் பொறிக்கும் உத்தேசமும் இருக்கிறது.

உலகத்துக்கே உண்மை ஒளி காட்டிய ஜோதி யாய் விளங்கிய மகாத்மாவுக்குப் பொருத்தமான ஞாபகச் சின்னமாக, ஸ்தூபியின் சிகரத்தில் ஜோதி வடிவமான தீபம் ஒன்று அமைத்து முக்கியமான தினங்களில் அந்தத் தீபத்தை ஏற்றி வைப்பது என்றும் திட்டம் போட்டிருக்கிறது.

காந்திமகான் பிறந்த தினத்தை இன்று கொண் டாடும் ஒவ்வொருவரும் அவருடைய ஞாபகத்தை நிலைநாட்டும் முயற்சிக்கு உதவி செய்யச் சங்கற்பம் செய்து கொள்ளுங்கள்.

---

*1949 அக்டோபர் 2ந் தேதி கல்கி இதழ் தலையங்கம்.*

## அகில உலகமும் அஞ்சலி செய்கிறது!

லண்டன் மாநகரிலே சித்திரம் எழுதுவதில் கை தேர்ந்த பெண்மணி ஒருவர் பாரத நாட்டின் மாபெரும் தலைவர் ஒருவருடைய உருவப்படத்தை வரைந்து கொண்டிருந்தார்.

அந்தப் பெண்மணியின் அழைப்புக்கு இணங்க நமது தலைவர் அவரது ஜாகைக்கு விஜயம் செய்தார். அப்போது அப்பெண்மணி தாம் எழுதிய உருவப் படத்துக்குக் கீழே கையெழுத்திட்டுத் தரும்படி பாரதத் தலைவரை வேண்டிக்கொண்டார்.

உலகமே வணங்கும் நமது தலைவரும் அதற்கு இசைந்தார். மேற்படி சித்திர நிபுணரின் கையில் இருந்த 'பிரஷை' வாங்கிக் கொண்டார்.

"நானும் ஒரு சித்திரக்காரனே. நான் சித்திரம் எழுதும் திரை இந்தியாதான்" என்ற வார்த்தைகளைப் பொறித்தார். அதன்கீழ் "எம். கே. காந்தி" என்றும் கையெழுத்திட்டுக் கொடுத்தார்.

காந்தி சகாப்தத்துக்குமுன் பாரத நாடு இருந்த நிலையையும், காந்தி சகாப்தத்துக்குப் பிறகு அதாவது இன்றைய இந்தியாவின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களே காந்திஜியின் மேற்படி வார்த்தை களில் பொதிந்துள்ள உண்மையை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

இந்தியாவாகிற திரையில் காந்திமகான் தீட்டியுள்ள படம் அகில உலகத்தையும் அதிசயிக்கும்படி செய்திருக்கிறது.

எதிர்கால ஹிந்துஸ்தானத்தைப்பற்றிக் கவிச் சக்கரவர்த்தி பாரதியார் கண்ட கனவு, இந்தியாவின் முடிசூடாச் சக்கரவர்த்தி காந்திஜியின் காலத்தில் ஜீவ உருப் பெற்றுப் பூர்த்தியாகியது.

ஆதி காலத்தில் மகரிஷிகளிடமிருந்து எழுந்த தவத்தீ பகைவர்களைத் தகித்ததாகக் கூறப்படுகிறது.

அதுபோலவே, மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக வேள்வியிலிருந்து எழுந்த தீ எட்டுத் திசைகளிலும் பரவியது; பாரத மக்களின் பகைவர்களாக இருந்த மனச் சோர்வு, அன்னிய ஆட்சியில் மதி மயக்கம், குருட்டு நம்பிக்கை, கோழைத்தனம் முதலியவற்றை ஒழித்தது; அடிமைத்தன அந்தகாரத்தை அகற்றி, சுதந்திரத் தீபம் சுடர் விட்டெரியும்படி செய்தது.

* * *

பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட சதிகளும், புரட்சிகளும் மலிந்துள்ள இந்த உலகில், காந்திஜி காட்டிய வழியைக் கண்டு உலக ராஜதந்திரிகள் எள்ளி நகையாடிய காலம் உண்டு.

ஏன்? அந்த வழியில் நம்பிக்கை இல்லாதவர்கள் இந்தியாவுக்கு உள்ளேயே ஏராளமாக இருக்கத்தான் செய்தார்கள்.

ஆனால், காந்திஜியின் ஆத்ம சக்தியும் தர்ம யுத்தமும் இறுதியில் வெற்றி அடைந்ததைக் கண்டு உலகம் முழுவதும் அதிசயத்தில் மூழ்கியது.

இந்தியா வாழ்வதா, வீழ்வதா என்ற மகத்தான பிரச்னையை வெகு நளினமாகத் தீர்ப்பதில் காந்திஜியின் வழி அமோக வெற்றி பெற்றது.

எனவே, உலகத்தை அல்லல்படுத்தும் பிரச்னைகளையும் தீர்க்க அதே வழியை ஏன் பின்பற்றக் கூடாது என்று சர்வதேச ராஜதந்திரிகள் இப்போது சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

சென்ற மகா யுத்தம் உக்ரமாக நடந்து கொண்டிருந்தபோது மகாத்மா காந்தி கூறிய வார்த்தைகள் இன்று அப்படியே உண்மையாகி இருக்கின்றன.

யுத்தத்தின் இறுதியில் வெற்றி பெற்றவர்கள் தோல்வியடைந்தவர்கள் இருசாராரும் சோர்ந்து விடுவார்கள் என்றார்; இருசாராரும் எளிதில் சமாளிக்க முடியாத எண்ணிக்கையற்ற பிரச்னைகள் முளைக்கும் என்று எச்சரித்தார்.

அந்த மாபெரும் தலைவரின் தீர்க்க தரிசனம் பொய்த்துவிடவில்லை; ஒரு சில வருஷங்களுக்குள்ளேயே அது உண்மையாகி விட்டது.

உலகிலுள்ள பெரிய வல்லரசுகளும் சரி, சிறிய நாடுகளும் சரி பற்பல எதிர்பாராத பிரச்னைகளைச் சமாளிப்பதற்குத் திணறிக் கொண்டிருக்கின்றன.

சென்ற சில வருஷங்களுக்குள் உலகில் உள்ள பல நாடுகள் சுதந்திரம் பெற்றுள்ளன.

எனினும், இந்தியாவைப்போல் சுதந்திரம் பெற்ற சில ஆண்டுகளுக்குள் உலகத்தின் நன்மதிப்பைப் பெற்ற தேசம் வேறு ஒன்றுமே இல்லை என்பது நிச்சயம்.

ஆயுத பலமின்றியே இந்தியா வல்லரசுகளையும் மிஞ்சிய செல்வாக்கையும் உயர்ந்த நிலையையும் அடைந்திருப்பது காந்தி கண்ட வழியின் பெருமையே ஆகும்.

சுதந்திரம் பெறுவதைக் காட்டிலும் ஒரு நாடு சமாளிக்க வேண்டிய மாபெரும் பிரச்னை வேறு எதுவும் இருக்க முடியாது.

அப்பேர்ப்பட்ட பிரச்னையைப் போர்த் தளவாடங்களின் உதவியின்றி நட்புடனும் நல்லெண்ணத்துடனும் சுமுகமாகத் தீர்த்த காந்தீய வழி, சர்வதேசப் பிரச்னைகளையும் தீர்த்து உலகை உய்விக்க முடியும் என்ற அபிப்பிராயம் நாளுக்கு நாள் பலம் அடைந்து வருகிறது.

அதனாலேயே அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி காந்தி ஜெயந்தி வைபவத்தை அகில உலகமும் கொண்டாடுகிறது; அந்த மகானுக்கு உலக மக்கள் அஞ்சலி செய்கின்றனர்.

---

*1953 அக்டோபர் 4ந் தேதி கல்கி இதழ் தலையங்கம்.*

# விண்ணவர் வியக்க வாழ்வோமாக!

கரை காணாத திரை கடலின் நீளத்தையும் அகலத்தையும் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

ஈடு இணையின்றிக் கம்பீரமாக நிற்கும் இமயத்தில் உள்ள எவரெஸ்டு சிகரத்தின் உயரத்தைக் கண்டு பிடித்து, உச்சியையும் எட்டிப் பிடித்து விட்டார்கள்.

ஆனால், அகில உலகும் அஷ்டதிக்கும் வியாபித்து, நட்சத்திர மண்டலத்தைத் தொட்டுக்கொண்டு வானோங்கி நிற்கும் காந்தி மகானுடைய புகழின் சிகரத்தை யாராவது அளவிட்டுக் கூற முடியுமா?

காந்திஜி மரணத்தை வென்ற மாபெரும் முனிவர்; இந்த உலகை நீத்த பிறகும் அவர் ஒவ்வொருவருடைய ஹிருதய பீடத்திலும் உயிருடன் வீற்றிருப்பார் என்ற கவி ரவீந்திரநாத் தாகூரின் தீர்க்க தரிசனம் அப்படியே உண்மையாகி இருப்பதைக் காண்கிறோம்.

இன்று காந்தி மகானின் புற உடல் மறைந்து விட்டது. ஆனால் அவரது ஆத்ம ஜோதி சந்திர சூரிய நட்சத்திர மண்டலங்கள் உள்ளளவும், பாரத புண்ணிய பூமி உள்ளளவும் ஒளி வீசிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமும் உண்டோ!

ம.ம. 4

மகாத்மா காந்தி குறிப்பிட்ட மதத்தையோ, நாட்டையோ மாத்திரமல்ல, அகில உலகத்தையும் உய்விக்க வந்த உத்தமராகத் திகழ்ந்தார்.

''...மெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங்
கிழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைத்திடத் துணிந்தனை...''

என்று கவிச் சக்கரவர்த்தி பாரதியார் கூறியதுபோல், பொய்யும் பித்தலாட்டமும் போர் வெறியும் நிறைந்த அரசியலைத் தூய்மைப் படுத்தும் வழியைக் காட்டினார்.

அன்பும் அற நெறியும் மிளிர்ந்த அரசியல் முறைகளைச் செயலில் காட்டி வெற்றி பெற்றார்.

வெளி நாடுகள் செய்யும் தவறைச் சுட்டிக் காட்டி, அவற்றின் கடமைகளை வற்புறுத்தவும் காந்திஜி தயங்கியதில்லை.

சென்ற மகா யுத்தத்தின்போது இந்திய மக்களின் இஷ்டத்துக்கு விரோதமாக இந்தியாவை யுத்தத்தில் இழுக்கக் கூடாது என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு அறிவுறுத்தினார்.

அதே சமயம் பிரிட்டிஷாரும் ஜெர்மானியர்களும் தங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கான வழியையும் எடுத்துக் கூறினார்.

காந்திமகான் அப்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சிலுக்கும் ஜெர்மன் சர்வாதிகாரி அடால்பு ஹிட்லருக்கும் எழுதிய கடிதங்களே இதற்குச் சான்று ஆகும்.

"ஜெர்மனியை அழித்துவிட்டு, பிரிட்டனோ, ஐரோப்பாவோ வாழ முடியாது; அது போலவே பிரிட்டனை நாசம் செய்துவிட்டு ஜெர்மனி வாழ முடியாது. இந்தப் போரைத் தடுக்கும் சக்தி உங்கள் ஒருவருக்குத்தான் உண்டு. நீங்கள் இந்தக் கோரிக்கைக்குச் செவி சாய்க்காவிடில் ஏற்படக் கூடிய பயங்கரமான விளைவுகளை எண்ணவும் நடுங்குகிறது!"

இவ்விதம் காந்திஜி ஹிட்லருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் போர் வெறி கொண்டிருந்த ஹிட்லரின் செவிகளில் அந்த உத்தமரின் உபதேசம் ஏறவில்லை.

இறுதியில் காந்திஜியின் தீர்க்க தரிசனம் உண்மையாயிற்று!

அந்த யுத்தத்தில் அழிந்த ஜெர்மனியைப் புனருத்தாரணம் செய்து பலப்படுத்தினாலன்றி, ஐரோப்பாவுக்குப் பாதுகாப்பு ஏற்படாது என்று இப்போது பிரிட்டனும் அமெரிக்காவும் அபிப்பிராயப் படுகின்றன.

ஜெர்மனியை மறுபடியும் ஆயுதபலம் வாய்ந்ததாகச் செய்யும் விஷயத்தில் வல்லரசுகளுக்குள் ஏற்பட்டுள்ள வேற்றுமை, மற்றொரு போருக்கு விதையாக அமைந்திருக்கிறது.

அன்று காந்திஜியின் அறமொழிகளுக்கு வல்லரசுத் தலைவர்கள் செவி மடுத்திருந்தால், இன்று உலகம் பரிதவிக்கும்படியான நிலைமை ஏற்பட்டிராது என்பது நிச்சயம்.

ஆனால் வல்லரசுகளைப்போல் பாரத நாடு ஏமாந்து போகவில்லை.

காந்தி மகானின் உபதேசத்தைச் சிரமேற் கொண்டு, அவரது அடிகளைப் பின்பற்றியதாலேயே இன்று பாரத நாடு பெறுதற்கரிய சுதந்திரத்தை அடைந்து உலக நாடுகளிடையே உன்னத ஸ்தானத்தை வகிக்கின்றது.

அறநெறியையும் அன்பு வழியையும் அனுஷ்டித்து வரும் வரையில், பாரத நாட்டை எத்தகைய இன்னல்களும் அணுகா என்று காந்தி மகான் அபயம் அளிக்கும் அற்புதக் காட்சியை நாம் கற்பனை செய்து கொள்ளலாம்.

காந்திஜி காட்டிய வழியில் அகிலம் புகழ, விண்ணவர் வியக்க வாழ்வோமாக!

---

*1954 ஜனவரி 31ந் தேதி கல்கி இதழ் தலையங்கம்.*

# அவர் நிகழ்த்திய அற்புதம்

இந்நாளில் அற்புதம் என்னும் சொல் சர்வ சாதாரணமாகி விட்டது. "அற்புதமாய்ச் சொற் பொழிவு ஆற்றினர்" என்கிறோம். "கச்சேரி அற் புதமாயிருந்தது!" என்கிறோம். "நேற்று நடந்த விருந்தில் சாம்பார் அற்புதம்!" என்கிறோம். "அடடா! இந்தக் கவிதை என்ன அற்புதமாயிருக் கிறது?" என்று வியக்கிறோம். போர்க்களங்களில் வெற்றியடைந்தவர்கள் "அற்புதங்களைச் சாதித் தார்கள்" என்கிறோம். விஞ்ஞானிகள் "அற்புதமான உண்மைகளைக் கண்டுபித்தார்கள்" என்று சொல்லு கிறோம்.

உண்மையிலே நமது காலத்தில் இந்த உலகில் நிகழ்ந்திருக்கும் அற்புதங்களிலெல்லாம் பெரிய அற்புதம் என்னவென்று சிந்தித்துப் பார்த்தோ மானல், காந்தி மகாத்மாவின் வாழ்க்கைச் சாதனை தான் என்று அறிந்து கொள்வோம். அதற்கு இணையான அற்புதத்தை நம் நாளில் யாரும் சாதித் ததில்லை. உலகத்தின் சரித்திரம் முழுதும் ஆராய்ந்து பார்த்தாலும் காந்தி மகானுடைய சாதனைக்கு இணை சொல்லக் கூடியவையாக மிகச் சில நிகழ்ச்சிகளையே குறிப்பிடக்கூடும்.

* * *

இன்று நம் நாட்டில் நடந்துவரும் கோவா விடுதலைப் போராட்டத்தைச் சிந்தியுங்கள்.

கோவா என்பது எவ்வளவு சிறிய பிரதேசம்? ஒரு சிறிய பட்டணமும் அதைச் சுற்றியுள்ள சில கிராமங்களும் சேர்ந்ததுதான்!

கோவாவுக்கு விடுதலை மறுக்கும் போர்ச்சுகல் தேசத்தைப் பாருங்கள்! ஐரோப்பாவின் ஒரு முனையில் ஒட்டிக் கொண்டிருக்கிறது! மிகச் சிறிய தேசம்! அதனுடைய சேனை பலமும் மிக அற்பமானது. ஐரோப்பாவின் அரசியல் சதுரங்க ஆட்டங்களில் போர்ச்சுகலுக்கு எந்தவித முக்கியத்துவமும் கொடுக்கப்படுவதில்லை.

அப்படிப்பட்ட உள்ளங்கை அளவினதாகிய சிறிய போர்ச்சுகல் தேசத்தின் பிடியிலிருந்து கோவாவை விடுதலை செய்ய எவ்வளவு பாடுபடவேண்டி யிருக்கிறது? எத்தனை நீண்ட காலப் போராட்டம் நடத்த வேண்டியிருக்கிறது! கோவா மக்களின் விடுதலைப் போராட்டத்துக்குப் பக்கபலமாக இந்திய அரசாங்கமும் இந்தியப் பொது மக்களும் இருக்கிறார்கள்! ஆயினும் கோவாவின் விடுதலை கைகூடவில்லை. பண்டித நேருவின் அயல் நாட்டுக் கொள்கையின் சிறப்பினால் இந்தியா சர்வ தேசீய விவகாரங்களில் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தும், கோவாவை மீட்பதற்கு அது இன்று வரையில் போதுமானதாக இல்லை. காரியம் இன்னும் கைகூடவில்லை; கோவா விடுதலை அடையவில்லை.

போர்ச்சுகல் சர்க்கார் இந்திய அரசாங்கத்தை மிரட்டிக் கொண்டும், சால்ஜாப்புக்கள் சொல்லிக் கொண்டும் காலத்தை ஓட்டி வருகிறார்கள்.

கோவாவின் விடுதலைப் போராட்டத்தை எண்ணிப் பார்த்துவிட்டுப் பாரத தேசம் விடுதலை அடைந்த அற்புதத்தை எண்ணிப் பாருங்கள்!

காந்தி மகாத்மாவின் சாதனை எவ்வளவு மகத்தானது, அற்புதங்களில் எல்லாம் அற்புதமானது என்பதை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

சென்ற முந்நூறு வருஷ காலமாக உலகத்தின் மிகப் பெரிய வல்லரசாக இருந்து வந்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம். முதலாவது எலிஸபெத்தின் காலத்தில் உலகாதிபத்தியத்தைத் தேடிய ஸ்பெயின் தேசத்தைப் பிரிட்டிஷார் முறியடித்தார்கள். பின்னர் நெப்போலியன் காலத்துப் பிரான்ஸ் தேசத்தைத் தோற்கடித்தார்கள். உலகில் ஐந்தில் ஒரு பகுதிப் பிரதேசத்தைத் தங்கள் சாம்ராஜ்யத்தின் கீழ்க் கொண்டு வந்தார்கள். நம்முடைய காலத்தில் இரண்டு உலக மகாயுத்தங்களில் வெற்றி கண்டார்கள். முதலில் ஜெர்மன் சக்கரவர்த்தியை வென்றார்கள். பின்னால் ஹிட்லரையும் முஸோலினியையும் முறியடித்தார்கள்.

அத்தகைய வெற்றி வெறிகொண்ட பிரிட்டிஷ் ஜாதியுடன் அரைத்துணி உடுத்திய காந்தி மகாத்மா போராடினார். பலாத்கார ஆயுதங்கள் எதுவுமின்றி, ‘நெல்லிக்காய் மூட்டை’ என்று நம்மவர்களே சொல்லிக்கொண்டிருந்த இந்திய மக்களைப் பக்கபலமாக வைத்துக்கொண்டு மகாத்மா போராடினார்.

171918 031,6M99,M K9

காந்திமகான் ஆரம்பித்து நடத்திய எந்தப் போராட்டத்திலும் இந்திய மக்கள் பூரணமாக அவரை ஆதரித்து நின்றதாகச் சொல்ல முடியாது.

1921ஆம் வருஷத்து ஒத்துழையாமை இயக்கத்தின்போது இந்தியாவின் வக்கீல்கள் கோர்ட்டுக்குப் போவதையும் மாணுக்கர்கள் கலாசாலைகளுக்குப் போவதையும் நிறுத்திஞர்களா? இல்லை. நூற்றுக்கு ஒருவர் வீதந்தான் மகாத்மாவின் கட்டளையை நிறைவேற்றிஞர்கள்.

சட்டசபைகளுக்கு அரசியல்வாதிகள் அனைவரும் கட்டுப்பாடாகப் போகாமல் இருந்தார்களா?—அதுவுமில்லை. காங்கிரஸ்வாதிகள் போகாத சமயத்தில் மற்றவர்கள் 'இதுவே நல்ல சமயம்' என்று நுழைந்து கொண்டார்கள்.

1930ஆம் வருஷத்துப் பொதுஜன சத்தியாக்கிரஹத்தின் போதுதான் இந்திய மக்களின் எத்தனை பேர் காந்திஜியின் வழியைப் பின்பற்றிஞர்கள்?

நூற்றுக்கு ஐந்துபேர் வீதம் இருக்கலாம். மற்றவர்கள் தங்கள் காரியங்களைப் பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

1940ஆம் ஆண்டில் பிரிட்டிஷாரின் யுத்த முயற்சிகளுக்கு உதவிசெய்ய வேண்டாம் என்று மகாத்மா காந்தி சொன்ஞரே? அதைத்தான் எவ்வளவு பேர் கேட்டார்கள்? எவ்வளவு பேர் காரியத்தில் நடத்திக் காட்டிஞர்கள்?

எல்லாவிதமான யுத்த உதவிகளும் பிரிட்டிஷாருக்கு இந்தியாவில் தங்கு தடையின்றிக் கிடைத்துக் கொண்டுதானிருந்தன.

இப்படியெல்லாமிருந்தும், காந்திஜி தமது சத்தியத்தின் பலத்தினுல், தவத்தின் வலிமையால், ஆத்ம சக்தியால் இந்தப் பெரிய பாரத தேசம் அரசியல் விடுதலை பெறும்படி செய்தார். லார்டு மவுண்ட்பேட்டன் கையினுலேயே டில்லி மாநகரில் யூனியன் ஜாக் கொடி இறக்கப்பட்டு, அசோகச் சக்கரம் பொறித்த இந்தியாவின் சுதந்திரக் கொடி உயர்த்தப் பட்ட விந்தையைக் கண்டோம்.

உலகத்தின் அரசியல் சரித்திரத்திலேயே இம் மாதிரி ஓர் அற்புதம் இதற்குமுன் என்றும் நிகழ்ந்ததில்லையென்று திட்டமாகக் கூறலாம்.

---

*1954 அக்டோபர் 3ந் தேதி கல்கி இதழ் தலையங்கம்.*

# அவதரித்த புண்ணிய தினம்

அரசியல் மட்டுமின்றி, வேறு பல துறைகளிலும் மகாத்மா காந்தி இந்த நாட்டில் அற்புதங்களை விளை வித்தார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்நாட்டின் சமூக வாழ்வில் வேர் ஊன்றியிருந்த தீண்டாமையை ஒழித்தார்.

பெரிய புராணத்தில் நந்தனார் சரித்திரத்தைப் படித்தவர்கள், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே இங்கே தீண்டாமை எவ்வளவு வலுப்பெற்றிருந்தது என்பதை அறியலாம். தீண்டாதவர் ஒருவர் எவ்வளவு தீவிர பக்தராயிருந்தாலும், அவர் ஆலயத்துக்குள் செல்வதென்பது நினைக்கவும் முடியாத காரியமா யிருந்தது.

காந்திமகான் காலத்தில் இந்த நாட்டிலுள்ள எல்லாத் தேவாலயங்களும் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டன. எல்லா மக்களும் எவ்வித வேற்றுமையுமின்றிச் சரிநிகர் சமானமாகக் கோயி லுக்குச் சென்று இறைவனை வழிபடும் உரிமையைக் காந்திஜி அளித்தார்.

இது போலவே, ஹிந்து சமூகத்தில் பல நூறு ஆண்டுகளாகக் குடிகொண்டு வேரூன்றிப் போயிருந்த பல தீமைகளை மகாத்மா அகற்றி எண்ணற்ற மக்க ளுக்குச் சமூக விடுதலையும் தந்தார்.

உலகெங்கும் பரவி மனித சமூகத்தைக் கெடுத்து வந்த நிரீசுவர—நாஸ்திக—உலகாயதக் கொள்கைகள் மேனாட்டாரின் தொடர்பினால் பாரத நாட்டிலும் பரவி வந்தன. "கண்டதே காட்சி; கொண்டதே கோலம். இந்த உலகத்தில் சுகபோகங்களைப் பெற்று வாழ்வதே வாழ்க்கையின் லட்சியம்" என்று சமூகத்தின் மேற்படியில் உள்ளவர்கள் கருதத் தலைப்பட்டார்கள். ஆங்கிலம் படித்தவர்கள் "அரசாங்க உத்தியோகமே மோட்சம்" என்று நம்பினார்கள்.

குரோதமும் லோபமும், மதமும் மாற்சரியமும் உலகில் வளர்ந்து வந்தன. தேசங்களுக்குள் துவேஷமும் யுத்த வெறியும், சமூகங்களுக்குள் பகைமையும் பூசலும் பரவி வந்தன.

இத்தகைய சூழ்நிலையில் காந்தி மகாத்மா தோன்றினார். "சத்தியமே ஜயம்" என்ற பழைய தர்மத்தை நிலைநாட்டினார். "அஹிம்சையினால் ஹிம்சையை வெல்லலாம்" என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி எடுத்துக் காட்டினார்.

அன்பினாலும் தியாகத்தினாலும் எப்பேர்ப்பட்ட பகைவர்களையும் வென்று வசப்படுத்தலாம் என்று அறிவூட்டினார்.

உண்மையுடன் உளங்கசிந்து இறைவனைப் பிரார்த்திப்பதனால் நடவாத காரியமும் நடந்துவிடும் என்று போதித்தார்; தம் சொந்த வாழ்க்கையினாலும் நிரூபணம் செய்தார்.

காந்திஜி பாரமார்த்திகத் துறையில் இந்தியா தேசத்துக்கும் உலகத்துக்கும் புரிந்த தொண்டு எல்லாவற்றிலும் மேன்மையானது.

அணுகுண்டு, ஜலவாயு குண்டு முதலிய பயங்கர ராட்சத ஆயுதங்களினால் இந்த உலகம் அழிந்து போகாமல், மனித வர்க்கம் உய்ந்து கடைத்தேறுமானால் அது காந்திமகானுடைய ஆத்ம சக்தியினால் தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மகாத்மாவின் ஆத்ம சக்தியினால்தான் உலகத்தையே அழித்துவிடக்கூடிய மூன்றாவது பயங்கர மகாயுத்தம் இன்னும் தொடங்காமல் தடைப்பட்டிருக்கிறது. மகாத்மாவின் ஆத்ம சக்திதான் இனியும் இந்த உலகத்தையும் மனித வர்க்கத்தையும் காத்தருளப் போகிறது.

* * *

காந்திமகான் தம் வாழ்நாளில் விளைத்த அற்புதங்களையும், அவற்றினால் பாரத நாடும் உலகமும் அடைந்திருக்கும் நலன்களையும் இன்று நம்மால் சரிவரக் கணித்து மதிப்பிட முடியாது. ஏனெனில் சிறிய காரியங்கள் பல—அற்பமான ஆசாபாசங்கள் பல—சுயநல நோக்கங்கள் பல—இன்று நம் உள்ளங்களைக் குழப்பியிருக்கின்றன. உலகில் ஒவ்வொருவரும் தத்தம் சிறிய வட்டத்திலிருந்து பார்த்து, 'காந்திஜியினால் நான் அடைந்த பயன் என்ன?' என்று சிந்திக்கிறார்கள்.

ஆனால் சரித்திரம் வேறு விதமாகக் காந்திமகானின் சாதனைகளை மதிப்பிடும். நூறு ஆண்டு

களுக்குப் பின்னால் வருவோர், மகாத்மா காந்தி என்னும் அவதார புருஷர் தோன்றி உலகத்தை உய்வித்த அற்புதத்தை எண்ணி எண்ணி மகிழ்வார்கள்; பாமாலை சூட்டுவார்கள்; காவியங்கள் இயற்றுவார்கள், வியந்து போற்றுவார்கள்.

* * *

காந்திமகான் அவதரித்த புண்ணிய தினமாகிய அக்டோபர் மீ 2உ வருகிறது. அன்று இந்தியா தேசமெங்கும் மக்கள் மகாத்மாவை நினைத்துக் கொள்வார்கள். அவர் புனித ஞாபகத்துக்கு அஞ்சலி செலுத்துவார்கள். கூட்டங்கள், ஊர்வலங்கள், பிரார்த்தனைகள் எல்லாம் நடக்கும்.

உலகத்திலும் இந்தியாவின் மற்றப் பிரதேசங்களிலும் காந்திமகானுடைய அவதார மகிமையைப் பற்றி எந்தவிதச் சந்தேகம் இருந்தாலும், நம் செந்தமிழ் நாட்டு மக்களிடையே எவ்வித ஐயப்பாடும் கிடையாது. தென்னாப்பிரிக்காவில் மகாத்மா சத்தியப் போர் தொடங்கியதிலிருந்து தமிழர்கள் அவருடன் தோளோடு தோள் நின்று உதவி புரிந்திருக்கிறார்கள். இந்தியாவின் விடுதலைக்காக அவர் நடத்திய ஒவ்வொரு போராட்டத்திலும் முன்னணியில் நின்றிருக்கிறார்கள்.

ரவ்லட் சட்டத்தை எதிர்த்துத் தேசமெங்கும் கடையடைப்புச் செய்து சத்தியாக்கிரஹ இயக்கம் தொடங்கும் யோசனை, மகாத்மா சென்னையில் தங்கியிருந்தபோதுதான் அவருடைய திரு உள்ளத்தில் உதயமாயிற்று.

காந்திமகான் தென் பாண்டிய நாட்டில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போதுதான் சட்டை, தலைப்பாகைகளைக் கழற்றி எறிந்துவிட்டு, அரையில் மட்டும் ஆடை உடுத்துவது என்னும் மகத்தான முடிவுக்கு வந்தார். இந்த ஒரு செயலானது மகாத்மாவை ஏழைகளோடு ஏழையாக்கி ஏழைகளின் உள்ளத்தில் நிலையான இடம் பெறச் செய்தது. புத்தர், ஏசுநாதர் முதலிய அவதார புருஷர்களின் வரிசையில் மகாத்மாவைச் சேர்த்து எண்ணும்படி செய்தது.

எனவே தமிழர்களுக்கும் காந்திஜிக்கும் மிக முக்கியமான தொடர்புகள் உண்டு.

தமிழ் மக்கள் காந்தி ஜெயந்தியை மிக உற்சாகமாகவும் கோலாகலமாகவும் கொண்டாடி மகிழ்வார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

---

*1954 அக்டோபர் 3ந் தேதி கல்கி இதழ் உப தலையங்கம்.*

## வந்தனம்

"வெற்றிகரமாக நிறைவேறியது என்று சொல்லுகிறோமே, அது என்னவென்று கேட்டால், இன்றைக்கு நடந்த வைபவந்தான்!" என்று ராஜாஜி எட்டயபுர அஸ்திவாரத் திருவிழா நடந்து முடிந்ததும் கூறினர். ராஜாஜி எந்த விஷயத்தைப்பற்றியும் அவ்வளவு உற்சாகமாகப் பாராட்டியோ, அளவு மீறிப் புகழ்ந்தோ சொல்லக்கூடியவர் அல்ல என்பது யாவரும் அறிந்ததே. அத்தகையவர் மேற்கண்ட வாறு சொல்ல வேண்டுமென்ருல், எட்டயபுரம் திருவிழா எவ்வளவு நன்ருக நடந்திருக்கவேண்டும், எவ்வளவு சிறப்பாகவும், விமரிசையாகவும் நடந்திருக்க வேண்டும் என்று சொல்லவேண்டியதில்லை. இது வரையில் தமிழ் நாட்டில் இலக்கிய சம்பந்தமான இத்தகைய மகத்தான உற்சவம் ஒன்று நடந்தது கிடையாது என்று சொன்ஞல், அது சிறிதும் மிகையாகாது.

* * *

"கடவுள் உண்டா?" "ஆன்மா என்பது உண்டா?" என்பது போன்ற கேள்விகள் ஆதி காலத்திலிருந்து கேட்கப்பட்டு வந்திருக்கின்றன; விவாதிக்கப்பட்டு வந்திருக்கின்றன; இன்னமும் முடிவின்றி விவாதித்துக் கொண்டுதான் வருகிருர்கள்.

மனித புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாத சக்தி எதுவும் கிடையாது என்று சாதிக்கிறவர்கள் இன்னமும் இருக்கத்தான் இருக்கிருர்கள்.

என்னுடைய சொந்த அநுபவத்தில், மனிதனுடைய புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாத சக்தி ஒன்று இருப்பதாக நான் உணர்ந்திருக்கிறேன். அத்தகைய சக்தியானது வெறும் குருட்டுத்தனமான சக்தியல்ல; ஏதோ ஓர் ஒழுங்கின்படி, ஒரு நியதியின்படி இந்த உலகத்தையும் இதில் நடைபெறும் சகல காரியங்களையும் நடத்தி வருகிறது என்றும் நான் நம்புகிறேன்.

அந்தச் சக்தியானது தற்சமயம் தமிழ்நாட்டை ஒரு மகோந்நதமான நிலைக்குக் கொண்டுபோகும் மார்க்கத்தில் நடத்திக்கொண்டு வருகிறது என்று நான் பரிபூரணமாய் நம்புகிறேன். பாரதியார் பாடிப் பரவியுள்ள பராசக்தி அதுதான் போலும்.

அந்த மகாசக்தியின் காரணமாகத்தான் எட்டயபுரத்தில் நாம் கண்ட அற்புதம் நிகழ்ந்தது என்று எனக்குத் தோன்றுகிறது. மற்றபடி மனிதப் பிரயத்தனத்தினால்மட்டும் அவ்வளவு மகத்தான ஒரு வைபவம் நடந்திருக்கக்கூடும் என்று என்னால் நம்ப முடியவில்லை.

* * *

புலன்களுக்கும் அறிவுக்கும் அதீதமான ஒரு சக்தியின் மகிமையினாலேயே எட்டயபுரம் அஸ்திவாரத் திருவிழா நடந்தது என்று நான் நம்பிய போதிலும், அந்தச் சக்தி யார் யார் மூலமாக வேலை செய்தது என்பதை மறந்துவிடவில்லை. ஒரு நாளும் மறக்கவும் முடியாது.

பலபேரின் மூலமாகப் பராசக்தியின் அருள் இயங்கியிருக்கிறது. பலருடைய ஒத்தாசையின் மூலமாகவும், உற்சாகமான ஒத்துழைப்பின் மூலமாகவுந் தான் தமிழ் நாட்டில் முதன்முதலாக இந்தத் தனிப் பெரும் இலக்கிய விழா நடந்தேறியது.

இதற்கு உதவி செய்தவர்களைப்பற்றி நினைக்கும் போது, முதன்முதலில் என்னுடைய சகோதரப் பத்திரிகாசிரியர்கள், எழுத்தாளர்கள் இவர்களுடைய உதவிதான் முன்னால் நினைவுக்கு வருகிறது.

பல சமயங்களில் என்னுடைய சகோதரப் பத்திரிகாசிரியர்களுடனும் எழுத்தாளர்களுடனும் மாறுபட்ட அபிப்பிராயங்களை நான் தெரிவிக்கவேண்டியிருந்ததுண்டு. காரசாரமான விவாதங்கள் பல எங்களுக்குள் நிகழ்ந்திருக்கின்றன. அரசியலிலும் கலைத்துறையிலும் மற்றவர்களின் அபிப்பிராயத்துக்கு மாறுபட்ட அபிப்பிராயங்களைப் பல சமயம் நான் வற்புறுத்திச் சொல்லவேண்டியதாயிருந்திருக்கிறது.

மேற்கூறிய வாதப் பிரதிவாதங்கள், அபிப்பிராய பேதங்கள் முதலியவற்றை இந்த அரும் பெரும் காரியத்துக்குத் தடையாக வைத்துக்கொள்ளாமல் தமிழ் நாட்டுப் பத்திரிகாசிரியர்கள், எழுத்தாளர்கள் அனைவரும் ஒருமுகமாக எட்டயபுரம் ஞாபகச் சின்ன முயற்சியை ஆதரித்தார்கள்.

எட்டயபுரம் ஞாபகச்சின்ன யோசனை வெளியான மறு வாரத்திலேயே கோயமுத்தூரில் ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களின் தலைமையில் எழுத்தாளர்

மகாநாடு கூடிற்று. அந்த மகாநாடு மேற்படி முயற்சியைப் பரிபூரணமாக ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

அதற்குப் பிறகு தமிழ் நாட்டிலுள்ள சகல பத்திரிகைகளும்—தினசரிகள், வாரப் பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள், மாதமிருமுறைப் பத்திரிகைகள் எல்லாம்—எட்டயபுரம் ஞாபகார்த்த முயற்சியைத் தொடர்ந்து ஆதரித்து வந்தன. அஸ்திவார விழா வைப்பற்றிய செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து விரிவாகப் பிரசுரித்தன.

இவ்விதம் ஒத்துழைத்து உதவி செய்த பத்திரிகாசிரியர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனங்களை முதன்முதலில் தெரிவிக்க வேண்டும் என்றுதான் இதை எழுத ஆரம்பித்தேன்.

ஆனால் இவ்வளவு எழுதிய பிறகு வந்தனம் எதற்காகச் செலுத்தவேண்டும் என்று ஐயம் உண்டாகிறது.

அவர்களுடைய வேலையை, அவர்கள் எல்லாருடைய சார்பாகவும் நான் நடத்தி வருகிறேனே தவிர வேறில்லை.

ஸ்ரீ ஸி. ஆர். சீனிவாசன் அவர்களைப் போன்ற பத்திரிகாசிரியர்களும் ஸ்ரீ வா. ரா. போன்ற எழுத்தாளர்களும் மற்றும் பல தமிழன்பர்களும் பல காலமாகச் செய்துவந்த இடைவிடாத பாரதி பிரசாரத்தின் பலனாகத்தான் இப்போது எட்டயபுரம் ஞாபகச் சின்னம் ஏற்படுகின்றது.

அவர்களுடைய பிரதிநிதியாக நான் ஏற்றுக் கொண்டு செய்யும் காரியத்துக்கு உதவி செய்வதற்காக அவர்களுக்கு நான் எதற்காக வந்தனம் செலுத்த வேண்டும்?

எனவே, வந்தனம் செலுத்துவதற்குப் பதிலாக அவர்களுக்கு ஒரு வேண்டுகோளுடன் இதை முடிக்க விரும்புகிறேன்.

ஞாபகச் சின்னக் கட்டிடத்துக்கு அஸ்திவார விழா மட்டுந்தான் இப்போது நடந்தேறியிருக்கிறது.

கட்டிடம் முழுதும் கட்டித் தமிழ் மக்களிடம் ஒப்படைக்கப்படும் வரையில், இதுவரையில் அளித்து வந்த உதவியையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து அளித்து வரும்படி எல்லாப் பத்திரிகாசிரியர்களையும் எழுத்தாளர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

---

*1945 ஜூன் 10ந் தேதி கல்கி இதழில் வெளியானது.*

## புதுச்சேரி வைபவம்

நாளது செப்டம்பர் மீ 11உ யன்று மகரிஷி வ. வே. சு. ஐயர், மகாகவி பாரதியைத் தேடிச் சென்று "பாரதி! இன்றைக்கு நீர் அமரரான தினம்; ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

"ஞாபகம் இருக்கிறது; அதற்காக என்ன செய்யவேண்டும்?" என்றார் பாரதி.

"தமிழகத்துக்குப் போய்விட்டு வரலாமே!" என்றார் ஐயர்.

"எதற்காக?" என்று கேட்டார் பாரதி.

"எதற்காகவா? தமிழ் நாட்டின் சரித்திரத்தில் இந்த வருஷம் ரொம்ப விசேஷமான வருஷமாயிருக்குமென்று தோன்றுகிறது. தமிழுக்கும் தமிழ்க் கவிகளுக்கும் ஒரேயடியாக யோகம் பிறந்துவிட்டதாய்ப் பூலோகத்திலிருந்து புதிதாய் வந்தவர்கள் எல்லோரும் சொல்லுகிறார்கள். இது உண்மையானால், இன்றைக்குத் தமிழ் நாட்டில் ஏக அமர்க்களமாய் இருக்க வேண்டுமல்லவா? என்னதான் நடக்கிறதென்று பார்த்துவிட்டு வருவோமே!" என்றார் ஐயர்.

"ஐயரே! வெறும் வதந்திகளை நம்புவதில் உமக்கு இணையாருமில்லை. பாமரராய், விலங்குகளாய், செவிடர்களாய், குருடர்களாய் நாம் விட்டுவிட்டு வந்த தமிழர்களுக்கு இந்த வருஷத்தில் திடீ

ரென்று தமிழன்பும் ரஸிகத் தன்மையும் எப்படி உண்டாகிவிடும் ?" என்று கேட்டார் பாரதியார்.

"பாரதி! வதந்திகளை நம்பி உம்மை நான் அழைக்கவில்லை. உம்முடைய கவிதைகளில் ததும்பும் ஜீவ சக்தியில் பூரண நம்பிக்கை எனக்கு உண்டு. உம்முடைய கவிதைகள் தமிழ் மக்களின் சமுதாயத்தில் ஒரு புதிய சக்தியை ஊட்டும் என்ற அழியா நம்பிக்கை கொண்டவன் நான். அந்த நம்பிக்கையினுல்தான் உம்மை அழைக்கிறேன். எப்படி யிருந்தாலும் நமது தெய்வத் தமிழ் நாட்டை ஒரு தடவை சுற்றிப் பார்த்து வருவதில் உமக்கு என்ன ஆட்சேபணை?" என்ருர் ஐயர்.

"அதற்கு ஆட்சேபம் இல்லை. கிளம்புங்கள், போகலாம்!" என்று பாரதியார் மீசையை முறுக்கிக் கொண்டு புறப்பட்டார்.

வான வீதி வழியாகத் தமிழ் நாட்டின் பல இடங்களையும் பார்த்துக்கொண்டு வந்தார்கள். பட்டணங்கள், கிராமங்கள் எங்கே பார்த்தாலும் பாரதி விழா நடைபெறுவதையும் பாரதி பாடல்கள் முழங்குவதையும் கேட்டுக்கொண்டு வந்தார்கள். எந்தக் கூட்டத்தில் நின்று கேட்டாலும், தமிழின் பெருமையையும் தமிழ் நாட்டின் பெருமையையும்பற்றிப் பெருமிதத்துடன் பேசிக்கொண்டிருப்பது கேட்டது.

கடைசியாக, இருவரும் புதுச்சேரி நகரத்துக்கு மேலாக வந்து சேர்ந்தார்கள். பிரிட்டிஷ் கொடுஞ் சிறையிலிருந்து தப்புவதற்காகப் பல வருஷகாலம்

தாங்கள் "வனவாசம்" போன்ற வாழ்க்கை நடத்திய அந்நகரத்தைக் கண்டதும் அவர்களுக்குப் பெரிதும் உற்சாகம் உண்டாயிற்று. அவர்களுக்குப் பழக்கமான இடங்களையெல்லாம் ஒவ்வொன்ருகப் பார்த்துக் கொண்டு வந்தபோது ஒதியஞ்சாலை மைதானத்துக்கு மேலாக வந்து சேர்ந்தார்கள். மைதானத்தில் ஏகக் கூட்டமாயிருந்தது. சுமார் பத்தாயிரம் ஜனங்கள் இருக்கலாம். அந்தப் பெரும் ஜனக் கூட்டத்தின் ஒரு பக்கத்தில் அழகான அலங்காரப் பந்தலும் அதனடியில் உபந்நியாச மேடையும் காணப்பட்டன. மேடையின் இருபுறங்களிலும் புதுச்சேரிப் பிரமுகர்கள் நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள்.

"ஐயரே' இங்கே என்ன வைபவம் நடக்கிறது?" என்று பாரதியார் கேட்டார்.

"சந்தேகம் என்ன? இங்கேயும் பாரதி விழாக் கொண்டாட்டந்தான் நடக்கிறது."

"இவ்வளவு ஜனக்கூட்டமும் பாரதிக்காகக் கூடியிருக்கிறது என்ரு சொல்கிறீர்?"

"ஆமாம்!"

"இதோ மேடைமீது அக்கிராசன நாற்காலியில் அமர்ந்திருப்பது யார், நமது பழைய நண்பர் எஸ். துரைசாமி ஐயரா?"

"அவரேதான்."

"இதோ அவருக்கு மாலை கொண்டு வந்து போடுகிருரே, முறுக்கு மீசைக்காரர் அவர் யார்?"

"தெரியவில்லையா? 'ராஜா பகதூர்' என்று அழைப்பீரே, அந்த ராஜாபாதர் முதலியார்தான்."

"நிஜமாக இவ்வளவு கூட்டமும், இந்தப் பத்தாயிரம் ஜனங்களும் எனக்காகவா கூடியிருக்கிறார்கள்? பார்த்துச் சொல்லும்!"

"சந்தேகமே இல்லை பாரதி! அது மட்டுமல்ல. இவர்கள் எல்லாரும் எதற்காகக் கூடியிருக்கிறார்கள், தெரியுமா? புதுச்சேரியில் உம்முடைய ஞாபகார்த்தமாக ஒரு மண்டபம் கட்டவேண்டுமாம். அதற்காகப் பணம் வசூல் செய்யப் போகிறார்களாம்!"

இவ்விதம் ஐயர் சொன்னதும் பாரதியார், "பாண்டியா! ஆச்சரியத்தினால் மூர்ச்சையடைந்து விழவேண்டிய சந்தர்ப்பம் ஒன்று உண்டு என்றால், அது இதுதான்! அது இதுதான்! அது இதுதான்!" என்று கூறியவண்ணம் மூர்ச்சையடைந்து விழப் போனார். அவரை ஸ்ரீ வ. வே. சு. ஐயர் தமது வலிவுள்ள இரு புஜங்களாலும் தாங்கிக்கொண்டு, "பாரதி! வேண்டாம்! ஆச்சரியத்தினால் மூர்ச்சையடையவேண்டிய தருணம் இது அல்ல. ஏனெனில், நம்முடைய காலத்திற்குப் பிறகு தமிழ் நாடு எவ்வளவோ மாறுதல் அடைந்துவிட்டது. அந்தக் காலத்துக்கும் இந்தக் காலத்தும் எவ்வளவோ வித்தியாசம்! அதிலும் நாளது 1945ஆம் வருஷம் தமிழ் நாட்டின் சரித்திரத்திலேயே மிக முக்கியமான வருஷமாகப் போகிறது. இந்த வருஷத்தில் தமிழ் மக்கள் தமிழ்க் கவிகளை அமோகமாய்ப் போற்றும் சம்பிரதாயம் ஏற்பட்டிருக்கிறது!" என்றார்.

மேற்கண்ட விதமாகப் பாரதியாரும் ஐயரும் தங்களுடைய சூக்ஷ்ம சரீரத்தில் உண்மையாகவே வந்திருப்பார்களா, வந்திருந்தாலும் மேற்சொன்ன வாறு சம்பாஷித்திருப்பார்களா என்று நேயர்கள் சந்தேகப்படலாம். இதைப்பற்றி நான் நிச்சயமாக உறுதி கூறுவவதற்கில்லை. ஆனால் எனக்கென்னமோ செப்டம்பர்மீ 11௳ புதுச்சேரி ஒதியஞ்சாலை மைதானத்தில் கூடியிருந்த மாபெரும் ஜனத்திரளைப் பார்த்ததும் ஒரே வியப்பாய்த்தான் போய்விட்டது. இந்த வருஷத்தில் இம்மாதிரி ஆச்சரிய சம்பவங்கள் மேலும் மேலும் நிகழ்ந்து வந்திருக்கின்றன. முதலில் எட்டயபுரம் அஸ்திவார விழா, அப்புறம் நாமக்கல் கவிஞர் நிதியளிப்பு வைபவம்; கடைசியாகப் புதுச்சேரியில் இந்த மாபெரும் வைபவம்.

காலஞ்சென்ற ஒரு கவியைப் பாராட்டுவதற்காகத் தமிழ் நாட்டில் ஓரிடத்தில் பத்தாயிரம் ஜனங்கள் கூடினார்கள். அவர்களில் இரண்டாயிரம் பேர் ஸ்திரீகள், அவ்வளவு பேரும் மாலை 6 மணியிலிருந்து இரவு பத்து மணி வரையில் இருந்து பிரசங்கமாரியில் நனைந்துவிட்டுப் போனார்கள் என்றால், அது சென்ற 1944ஆம் வருஷம் வரையில் நம்பக்கூடாத காரியமாகவே கருதப்பட்டிருக்கும். இந்த வருஷத்திலே கூட நானே மேற்படி வைபவத்துக்குப் போய் நேரில் பார்த்திராவிட்டால் நம்புவது கஷ்டமாகத்தானிருந்திருக்கும்.

மேற்படி விழா சம்பந்தமான இன்னொரு ஆச்சரிய சம்பவம், ஏறக்குறைய நம்பத்தகாத விஷயம் என்ன வெனில், அரவிந்த ஆசிரம வாசியான ஸ்ரீ எஸ். துரைசாமி ஐயர் அவர்கள் கூட்டத்துக்கு அக்கிராசனம் வகித்தது தான்.

இக்காலத்தில் புதுவைக்கு உலகப் பிரசித்தி அளித்திருக்கும் மகான் அரவிந்தரின் ஆசிரமத்துக்குள் ஒரு முறை பிரவேசித்தவர்கள் மறுபடி திரும்பி வெளியில் வருவதே இல்லை என்று நான் கேள்விப் பட்டிருந்தேன்!

ஆகவே புதுச்சேரி நண்பர்கள் என்னை வந்து பாரதி விழாவுக்கு அழைத்தபோது, நடக்காத காரி யத்தைச் சொல்வதாகவே நினைத்துக்கொண்டு, ஸ்ரீ எஸ். துரைசாமி ஐயர் கூட்டத்துக்குத் தலைமை வகித்தால் பொருத்தமாயிருக்கும் என்று சொல்லி வைத்தேன். நாலு நாளைக்கெல்லாம் புதுச்சேரி யிலிருந்து வந்த பாரதி விழா விளம்பரத்தில் "ஸ்ரீ எஸ். துரைசாமி ஐயர் தலைமையில் நடைபெறும்" என்று பார்த்ததும், மேக மண்டலம் வரையில் என்னைத் தூக்கி வாரிப்போட்டது!

பல்லாயிரக்கணக்கான வருமானமுள்ள பிரசித்த ஸிவில் லாயராயிருந்த ஸ்ரீ எஸ். துரைசாமி ஐயர் மேற்படி தொழிலையும் வருமானத்தையும் வீடு வாசலையும் துறந்து வானப் பிரஸ்தராகி அரவிந்த ஆசிரமத்தைச் சேர்ந்தார் என்ற செய்தியை நாலைந்து வருஷங்களுக்குமுன் கேட்டபோது, அவரை அறிந்த சென்னை வாசிகள் எல்லாம் இராமரைப் பிரிந்த

அயோத்திவாசிகளின் நிலையை அடைந்திருந்தார்கள். மகாகவி பாரதியாரின் அத்தியந்த நண்பர்களில் ஸ்ரீ எஸ். துரைசாமி ஐயர் ஒருவர். பாரதியாரின் ஞாபகார்த்தமாக ஏதேனும் ஒரு ஸ்தாபனம் நிறுவ வேண்டும் என்னும் யோசனையை முதன் முதலில் வெளியிட்டவர் ஸ்ரீ எஸ். துரைசாமி ஐயர்தான். பத்து வருஷங்களுக்குமுன்பு ஸ்ரீ எஸ். துரைசாமி ஐயர் அளித்த ஆரம்ப நன்கொடையுடன் 'பாரதி சங்கம்' ஒன்று சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் சரியான காலம் வந்துசேராதபடியால் மேற்படி சங்கம் நீடித்து நடைபெறவில்லை.

ஸ்ரீ எஸ். துரைசாமி ஐயர் பாரதியாரிடம் கொண்டிருந்த அன்பைக் குறித்து இவ்வளவு எனக்குத் தெரிந்திருந்த போதிலும், ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்துக்குள்ளிருந்து வெளிவந்து அவர் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார் என்று நான் எதிர் பார்க்கவில்லை. பாரதியார் விஷயத்தில் எத்தனையோ அதிசயங்கள் நடந்ததுபோல் இந்த எதிர்பாராத அதிசயமும் நடக்கத்தான் நடந்தது. இந்த அதி சயத்தைப் புதுச்சேரிவாசிகள் நன்கு அனுபவித்து ஆனந்தித்தார்கள் என்பது கூட்டத்தில் நன்கு தெரிய வந்தது.

* * *

தமக்குத் தமிழ் பேசி வழக்கமில்லை, பேசத் தெரியாது, பேச முடியாது என்ற அவை அடக்கத் துடன் அக்கிராசனர் ஸ்ரீ எஸ். துரைசாமி ஐயர்

ஆரம்பித்து அழகான தமிழில் ஆவேசத்துடன் பேசினர். வித்வான் சிவப்பிரகாசம் அவர்கள் தமிழ்ப் புலமை ததும்பிய நடையில் பாரதியார் கவிகளின் மேன்மையை எடுத்துரைத்தார். இந்த வைபவத்துக் காகவே வந்து சேர்ந்ததுபோல் முதல்நாள்தான் தேசப்பிரஷ்ட உத்திரவு நீங்கிப் புதுவைக்கு வந்து சேர்ந்திருந்த தொழிலாளர் தலைவர் ஸ்ரீ வ. சுப்பையா அவர்கள் "பாரதியார் பொது உடைமைக் கவிஞர்; பாட்டாளி மக்களின் விடுதலையைப் பாடிய கவிஞர்" என்பதை எடுத்துரைத்தார். 'ஜனசக்தி' உதவி ஆசிரியர் ஸ்ரீ ராமகிருஷ்ணன் வீராவேசம் மிகுந்த பிரசங்கம் செய்தார். ஸ்ரீ எஸ். ஏ. வேதநாயக ஐயா அவர்கள் வைதிகக் காங்கிரஸ் வாதிகளின் சார்பாக ஆசி கூறினர். கடைசியில், நானும் பேசினேன். இவ்வளவு பிரசங்கங்களேயும் பொறுமையாகக் கேட் டுக்கொண்டு உட்கார்ந்திருந்ததிலேயே அந்தப் பத்தாயிரம் புதுவை வாசிகளின் பாரதி அபிமானம் நன்கு வெளியாயிற்று.

* * *

புதுச்சேரியில் காலேயில் எழுந்ததும் ஒருவன் பல் தேய்க்க வேண்டுமென்ருல் அதற்குக்கூடச் சர்க்கார் உத்தரவு வேணும்! அப்பேர்ப்பட்ட ஊரில் பொதுக் கூட்டத்தில் ஒலிபெருக்கி வைப்பதற்கு உத்திரவு இல்லாமல் சரிப்படுமா? மேற்படி உத்திரவைக் கவர்ன ரிடம் பெற்று வருவதற்காக நிர்வாகிகள் அன்று எடுத்துக்கொண்ட பெரும் பிரயாசையையும் கடைசி யில் கூட்டம் ஆரம்பித்துச் சிறிது நேரத்துக்கெல்லாம்

ஒலிபெருக்கிக்குக் 'கரண்ட்' வந்ததையும் பார்த்த பிறகு இவர்களால் சாதிக்க முடியாத காரியம் எதுவுமே இல்லையென்று கருதினேன்.

புதுச்சேரி, எட்டயபுரத்தைப்போல் சிறு கிராமம் அல்ல ; பெரிய நகரம். செல்வர்களும் பிரபல வர்த்தகர்களும் வசிக்கும் நகரம். விழிப்படைந்து கட்டுப்பாடு பெற்ற பதினாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வசிக்கும் நகரம். எனவே புதுச்சேரியில் பாரதி ஞாபக மண்டபம் கட்டுவதற்குப் புதுச்சேரியிலேயே பெருநிதி வசூலாகவேண்டியது அவசியம். ஆனாலும் மேற்படி முயற்சியில் தமிழ்ப் பொதுமக்களும் பங்கு பெறுவதற்கு நியாயமும் உரிமையும் உண்டு.

எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்தார்.

ஆனால் பாரதியாரின் கவிதைகள் பெரும்பாலும் புதுவை நகரில் பிறந்தன !

எனவே, தமிழ் நாட்டிலுள்ள தேசபக்தர்களுக்கும் தமிழன்பர்களுக்கும் எட்டயபுரத்தைப் போலவே புதுச்சேரியும் புனித யாத்திரை ஸ்தலமாகும்.

பாரதியாருக்குத் தஞ்சமளித்த புதுச்சேரியில் பாரதியார் ஞாபகார்த்த மண்டபம் கட்டவேண்டியது மிகவும் அவசியம்.

---

**1945 செப்டம்பர் 23ந் தேதி கல்கி இதழில் வெளியானது.**

# எட்டயபுரத்தில் !

ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் பிறந்த 'ஸ்டா போர்டு ஆன் ஆவன்' என்னும் கிராமத்தில் அந்தக் கவியின் ஞாபகார்த்தமாக ஒரு நாடக அரங்கம் அமைந்துள்ளது.

ஆண்டுதோறும் ஷேக்ஸ்பியர் தினத்தில் பல்லாயிரக்கணக்கான ஆங்கில மக்கள் அந்த நாட்டின் பல பாகங்களிலிருந்தும் திரண்டு வந்து அங்கே திருவிழா நடத்துகிறார்கள்.

நிச்சப்தமாய் அமைதி குடிகொண்டு விளங்கும் அந்தப் பிரதேசம் அப்போது ஜனக்கூட்டம் நிறைந்து ஒரே கோலாகலமாயிருக்கும். புள்ளினங்களின் இனிய கானம் கேட்டுக் கொண்டிருந்த இடத்தில் காது செவிடு படும்படியான வாத்திய முழக்கங்கள் கேட்கும்.

அரங்க மேடையில் ஷேக்ஸ்பியர் நாடகங்களை நடிப்பார்கள். பிரசங்க மேடைகளில் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப்பற்றிப் பேசுவார்கள்.

இந்த மாதிரி யெல்லாம் ஆங்கில மக்கள் தங்களுடைய கவியைப் போற்றுகிறபடியினாலே தான் சமீபத்தில் அவர்களுக்கு நேர்ந்த பெரும் விபத்தைக் கடந்து முடிவில் ஜயபேரிகை முழக்குதல் சாத்திய மாயிற்று.

பழம் பெரும் மக்களான தமிழர்கள் வருங் காலத்தில் மகோந்நத நிலையை அடையப் போகி ருர்கள் என்பதற்குப் பல அறிகுறிகள் காணப்படு கின்றன. அவற்றில் ஒன்று நம்முடைய நாட்டுக் கவிஞர்களை நாம் போற்ற ஆரம்பித்திருப்பதுதான்.

சென்ற 1944ஆம் வருஷம் இதே செப்டம்பர் மீ" முதல் வாரத்தில் எட்டயபுரத்தில் பாரதி இலக்கிய மன்றத்து நண்பர்கள் ஒரு மகாநாடு கூட்டினுர்கள். பாரதியார் பிறந்த ஊரில் அந்த மகாகவிக்கு ஒரு ஞாபகச் சின்னம் எழுப்ப வேண்டுமென்று அம்மகா நாட்டில் பிரஸ்தாபித்தார்கள்.

அந்த வேண்டுகோளைக் 'கல்கி'யின்மூலம் வெளியிட்டபோது, இலங்கை முதல் லாகூர் வரையில் உள்ள தமிழர்கள் மேற்படி யோசனையை உற்சாகமாக ஆதரித்துப் பொருளுதவி பொழிந்தார்கள். இவ் வருஷம் ஜுன் மீ" 3உ யன்று மிகச் சிறப்பாக அஸ்தி வார விழாவும் நடந்தது.

ஞாபகச் சின்னக் கட்டிடத்துக்கு ஒரு பிளான் போட்டுக்கொடுக்கும்படியாகக் கட்டிடச் சிற்ப நிபுணர் ஸ்ரீ சித்தலே என்பவரைக் கேட்டுக் கொண்டிருந் தோம். அஸ்திவார விழாவில் வைப்பதற்காக முதலில் கட்டிடச் சித்திரம் அவர் வரைந்து கொடுத் தார். விழாவுக்கு அவரும் வந்திருந்து, கட்டிடம் கட்டப்போகும் இடம் சுற்றுப்புறம் முதலியவற்றைப் பார்த்துவிட்டு அளவுகள் முதலிய விவரங்களுடன் பிளான் போட்டுக் கொடுத்திருக்கிருர்.

ஸ்ரீ எல். எம். சித்தலே (F.R.I.B.A., F.I.I.A., A.M.T.P.T.) மகாராஷ்டிர தேசத்தவர். கட்டிடச் சிற்ப வேலையில் இந்தியா தேசத்திலேயே பிரசித்தி பெற்ற நிபுணர். மேனாடுகளில் விஸ்தாரமான யாத்திரைகள் செய்து வந்தவர். பல யுனிவர்ஸிடிகளில் வெகு வெகு நீளமான பட்டங்கள் பெற்றவர். கீழ்நாட்டுச் சிற்பக் கலையின் தத்துவங்களையும் நன்குணர்ந்தவர்.

சாதாரணமாய் இம்மாதிரி ஒரு கட்டிடப் பிளான் போட்டுக் கொடுப்பதற்குப் பெருந்தொகை சன்மானமாக வாங்கக் கூடியவர். தமிழ் நாட்டு மகாகவியின் ஞாபகார்த்தக் கட்டிடத்துக்கு ஸ்ரீ சித்தலே எவ்விதப் பிரதிப் பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் பல தினங்கள் சிரமம் எடுத்துக்கொண்டு வேலைசெய்து கட்டிடச் சித்திரமும் பிளானும் போட்டுக் கொடுத்துள்ளார்.

தமிழ் மக்களின் சார்பாக ஸ்ரீ சித்தலே அவர்களுக்கு மனமார்ந்த நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் வரைந்த ஞாபகார்த்தக் கட்டிடச் சித்திரத்தைப்போலவே அழகாகவும் கம்பீரமாகவும் கட்டிடம் அமைய வேண்டும் என்று சதா பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன்.

* * *

கட்டிடம் அழகாகவும் அமைய வேண்டும்; அதோடு சீக்கிரமாகவும் அமைய வேண்டும். அடுத்த பாரதி தினக் கொண்டாட்டம் வருவதற்குள் கட்டிடத்

திறப்பு விழாவும் நடந்துவிட வேணடும. இது நம்முடைய ஆசை.

இந்த ஆசை நிறைவேறலாம் என்பதற்கு நல்ல சகுணங்கள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அவற்றில் முக்கியமானது, எட்டயபுரம் ராஜா அவர்கள் தமது சொந்த மேற்பார்வையில் கட்டிடத்தைத் துரிதமாகவும் நல்ல முறையிலும் கட்டிக் கொடுக்க ஒப்புக் கொண்டிருப்பதுதான்.

மகாராஜா அவர்களின் மேற்பார்வையில் கட்டிட அஸ்திவார வேலே ஆரம்பமாகி ஏறக்குறையத் தரை மட்டத்திற்கு வந்திருக்கிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தமிழ் மக்களுக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

* * *

எட்டயபுரத்தைப்பற்றி இன்னும் ஒரு சந்தோஷமான விஷயத்தையும் இந்தச் சமயத்தில் நேயர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

பாரதி ஞாபகார்த்த நிதி வசூலாகிக்கொண்டு வந்தபோது, எட்டயபுரத்திலிருந்து சில கையெழுத்தில்லாக் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. நடுவிற்பட்டி பாரதி வாசகசாலே என்ற பெயருள்ள ஒரு ஸ்தாபனம் அங்கு இருப்பதாகவும், இவர்கள் பாரதி ஞாபகார்த்தமாக ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்களின் சங்கீதக் கச்சேரி வைத்து மகாராஜா அவர்களின் ஆதரவுடன் பணம் வசூலித்ததாகவும்,

அந்தத் தொகை டாக்டர் சீனிவாசன் என்பவரிடம் இருப்பதாகவும் மேற்படி கடிதங்களின்மூலம் தெரிய வந்தது.

இதற்கும் நமது ஞாபகார்த்த முயற்சிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்று தீர்மானித்து மேற்படி கடிதங்களைப்பற்றி நான் கவலைப்படாம லிருந்தேன்.

ஆனால் அஸ்திவார விழாவெல்லாம் நடந்து சென்னைக்குப் புறப்படுகிற சமயத்தில் எட்டயபுரம் மகாராஜா அவர்களின் முன்னிலையில் மேற்படி டாக்டர் சீனிவாசன் என்னிடம் ஒரு மூடிய கவரைக் கொடுத்தார். வழியில் கவரைப் பிரித்துப் பார்த்த போது அதில் ரூ. 1591 இருந்தது.

இவ்வளவு பெருந்தன்மையுடன் பெரிய முயற்சி யில் சந்தோஷத்துடன் கலந்துகொள்ளத் தீர் மானித்துக் காரியம் செய்த சீனிவாசன் அவர்களுக் கும், மற்றும் மேற்படி நடுவிற்பட்டி பாரதி வாசக சாலையைச் சேர்ந்த அன்பர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

1945 செப்டம்பர் 9ந்தேதி கல்கி இதழில் வெளியானது.

# இரண்டு கவர்னர்கள்

வாழ்க பாரதியார்! வாழ்க அவர் மணிவாக்கு! தேசம் அன்னிய அதிகார வர்க்கத்துக்கு அடிமைப்பட்டு நாலா பக்கமும் அந்தகாரம் சூழ்ந்திருந்த காலத்தில் நம் கவியரசர் பாரதியார் பூரண சுதந்திரக் கனவு கண்டார்! "ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்!" என்றார். "இந்தப் பூமியில் எவர்க்கும் அடிமை செய்யோம்!" என்றார். "இந்த ஜன்மத்திலே விடுதலை உண்டு!" என்று சொன்னதோடு திருப்தியடையவில்லை. "விடுதலை உண்டு! நிலை உண்டு!" என்று அழுத்தமாயும் திருத்தமாயும் கூறினார்.

அத்தகைய தீர்க்கதரிசியின் ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழா சுதந்திர இந்தியாவிலே நடக்க வேண்டும் என்று ஏற்பட்டிருக்கிறது. இரண்டு பெரிய இந்திய மாகாணங்களின் இரண்டு சுதந்திர கவர்னர்கள் வந்து மேற்படி திறப்பு விழாவை நடத்த வேண்டுமென்றும் ஏற்பட்டிருக்கிறது. "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்!" என்ற பாரதியார் மணிவாக்குப் பரிபூரணமாக நிறைவேறும் வண்ணம் கவியரசி சரோஜினி "ஹெர் எக்ஸலென்ஸி கவர்னர்" ஆகி உத்தியோகம் பார்த்தபிற்பாடு, பாரதியார் மணிமண்டபத்தின் திறப்பு விழா எட்டயபுரத்தில் நடைபெற வேண்டு மென்று ஏற்பட்டிருக்கிறது.

* * *

பாரதி மண்டபத் திறப்பு விழாவுக்காக நாம் அழைத்திருந்த ராஜாஜி, கவியரசி இருவருக்கும் கவர்னர் உத்தியோகம் ஆன விந்தைச் செய்தியை

நேயர்கள் பத்திரிகைகளிலே படித்து மகிழ்ந்து குதூகலித்திருப்பார்கள்.

இது காரணமாகச் சில பத்திரிகைகளில் வெளியான தவருன செய்தியைக் கண்டு சில நண்பர்கள் ஒரு நாள்—இருபத்து நான்கு மணி நேரம்—கலவரமும் அடைந்திருக்கக்கூடும். "ராஜாஜியும் சரோஜினியும் திறப்பு விழாவுக்கு வரமாட்டார்கள்" என்ற செய்தியைத்தான் குறிப்பிடுகிறேன். வருவார்கள். கட்டாயம் வருவார்கள். ஆனால் செப்டம்பரில் வருவதற்குப் பதில் அக்டோபரில் வருவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜாஜி மேற்கு வங்காளத்துக் கவர்னர் ஆகலாம் என்ற செய்தி வந்த அதே தினத்தில் ராஜாஜியிடமிருந்து திறப்பு விழாத் தேதி சம்பந்தமாகத் தந்தி வந்தது. "பாரதி மண்டபத் திறப்பு விழாவின் தேதியைத் தள்ளிப்போட அவசியம் நேர்ந்திருப்பது பற்றி வருந்துகிறேன். ஸ்ரீமதி சரோஜினி தேவிக்கு லக்னௌவிலும் எனக்குக் கல்கத்தாவிலும் வேலை ஏற்பட்டிருக்கிறது. திறப்பு விழாவை அக்டோபர் இரண்டாவது அல்லது மூன்ருவது வாரத்தில் வைத்துக் கொள்ள வேணுமென்று ஸ்ரீமதி சரோஜினி தேவி கோருகிருர்கள்" என்பது தந்தியின் சாராம்சம். பாரதி மண்டபத் திறப்பு விழாவை ராஜாஜி எவ்வளவு முக்கியமானதென்று கருதுகிருர்கள் என்பதை மேற்படி தந்தியிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

மறுபடியும் யோசனை செய்து திறப்பு விழாவுக்கு அக்டோபர் மீ 12உ 13உ களை ராஜாஜி அங்கீகரித்திருக்கிருர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்

கொள்கிறேன். *கவியரசியும் மேற்படி தேதிகளை ஒப்புக் கொண்டிருக்கிருர்கள்.

இவ்விதம் திறப்பு விழாத் தேதி ஒரு மாதம் தள்ளிப் போடப்பட்டது விழாவை நடத்தும் பொறுப் பேற்றவர்களுக்கும் சௌகரியந்தான் என்பதையும் குறிப்பிட்டு வைக்கிறேன். சாவதானமாக யோசித் துச் சிறந்த முறையில் திறப்பு விழாவுக்குரிய சகல ஏற்பாடுகளையும் செய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத் திருக்கிறது. ஒத்திப் போட்ட வைபவம் ஒன்றுக்கு மூன்று மடங்கு சிறப்பாக நடக்கும் என்று தமிழன் பர்கள் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

* * *

சென்ற முறை பாரதியார் ஞாபகார்த்த நிதி வசூல் நடத்தியபோது, எந்த இடத்திலும் யாரையும் பார்க்கப் போகவில்லை. நாடங்கும் உள்ள தமிழன் பர்கள் அவரவர்களே போட்டியிட்டுக்கொண்டு பணம் அனுப்பினுர்கள். சிலர் வசூலித்தும் அனுப் பினுர்கள்.

இந்தத் தடவை திறப்பு விழாவுக்குத் தேதி குறிப் பிட்டுவிட்டபடியாலும், அதற்குப் பிறகு நிதி வசூலை நீடித்து நடத்த விருப்பமில்லாதபடியாலும் சில முக் கியமான ஊர்களுக்கு நிதி வசூல் செய்ய நேரில்

---

* கவிக்குயில் ஸ்ரீமதி சரோஜினி தேவி கவியரசருக்குத் தமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள எவ்வளவோ ஆசைப்பட்ட போதிலும், அப்போதுதான் ஐக்கிய மாகாண கவர்னர் பதவியை ஏற்றிருந்த அவர் தமது அலுவல்கள் பலவற்றையும்—குறிப்பாக அகதிகள் பிரச்னையை—கவனிக்க வேண்டி யிருந்ததால் விழாவுக்கு நேரில் வரமுடியாமலே போய்விட்டது. எனினும் வாழ்த்துமடல் அனுப்பிவைத்து விழாவினைச் சிறப்பித்தார்கள்.

போகலா மென்று எட்டயபுரம் பாரதி மன்றத்தார் யோசனை சொன்னார்கள். அதை நானும் ஒப்புக் கொண்டேன். பாரதி மன்றத் தலைவர் ஸ்ரீ கந்தசாமி செட்டியாரும் நானும் இராஜபாளையத்தின் பழம் பெரும் தேசபக்தரான ஸ்ரீ சின்ன வெங்கடராஜா அவர்களும் வசூலுக்குப் புறப்பட்டோம்.

மேற்படி நிதி வசூல் யாத்திரையில் நாங்கள் அடைந்த அநுபவம் அற்புத அநுபவமாயிருந்தது. சென்ற இடங்களிலெல்லாம் முகமலர்ச்சியுடன் பளிச்சுப்பளிச்சென்று பணத்தை எடுத்துக் கொடுத்தார்கள். எண்ணிக் கொடுத்தார்கள்; எண்ணாமலும் கொடுத்தார்கள்.

ஜமீந்தார்கள் தங்களுடைய வருங்கால நிலைமையென்னவோ என்று கவலைப் படக்கூடிய காலமல்லவா இது? அப்படிப்பட்ட நிலைமையிலும், வயதிலும் அநுபவத்திலும் முதிர்ந்த பெருந்தகையான சேத்தூர் ஜமீந்தார் அவர்கள் பாரதியாரே நேரில் வந்து விட்டதுபோல் எங்களுக்கு வரவேற்பும், விருந்தும் அளித்து, பாரதியார் பாலராயிருந்தபோது தமது சமஸ்தானத்திலும் சில நாள் வளர்ந்ததைப் பெருமையுடன் எடுத்துச் சொல்லி ரூபாய் ஆயிரத்தொன்று ரொக்கமும் கொடுத்தனுப்பினார்கள்.

ஊத்தமலையின் இளம்பிள்ளை ஜமீந்தார் ஸ்ரீ என். எச். எம். பாண்டியன் அவர்களும் பாரதியார் விஷயத்தில் அபார உற்சாகத்தைக் காட்டினார்கள். இராஜபாளையத்தில் முதன் நன்கொடை நமது மாஜி மந்திரி ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்களுடையது.

தேச பக்திக்கும் வேட்டை நாய்க்கும் பெயர் போன இராஜபாளையத்தில் நாங்கள் அடைந்ததை ஒரு தனி அநுபவம் என்றே சொல்ல வேண்டும். நிதி வசூலுக்காக நாங்கள் புகுந்த வீடு எதிலும் வேட்டை நாயைக் காணவில்லை. அன்பாக வரவேற்று, உபசரித்து விஷயத்தைச் சொன்ன தட்சணமே வெற்றிலைப் பாக்குத் தட்டில் பணத்தை வைத்து இரண்டு கையாலும் அதனை எடுத்துக் கொடுத்தார்கள்.

இப்படி எத்தனையோ ரஸமான விவரங்கள் சொல்வதற்கு இருக்கின்றன. இடமின்மையால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

---

*1947 ஆகஸ்டு 10ந் தேதி கல்கி இதழில் வெளியானது.*

# இதோ ஒரு அற்புதம்!

நம் கண்முன்னே இதோ ஒரு அற்புதம் நிகழ்ந்திருக்கிறது! அதுவும் நமது செந்தமிழ் நாட்டில் நடந்திருக்கிறது.

தேச மகா கவிக்கு ஒரு ஞாபகச் சின்ன மண்டபம் இதோ எழுந்திருக்கிறது! தமிழ் நாட்டுக்குப் புத்துயிர் அளித்த கவியரசருக்குத் தமிழ் மக்கள் சமர்ப்பித்த காணிக்கை இதோ காணப்படுகிறது!

இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு மகா கவிக்கு ஞாபகார்த்த மண்டபம் கட்டிய பெருமையைத் தமிழ் நாடு அடைந்திருக்கிறது!

இதோ அமரர் பாரதியார் ஆகாசத்தில் வந்து நிற்கிருர். "தலைநிமிர்ந்து நில்" என்றும் "மார்பை நிமிர்த்தி நட!" என்றும் தம் வாணுலெல்லாம் உபதேசித்த தீர மகாகவி முதன்முதலாகத் தலை குனிந்து நோக்குகிருர். அழகிய சிறு கோபுரம் அமைந்த அற்புத மண்டபத்தைப் பார்க்கிருர். ஆயிரம் ஆயிரம் தமிழ் மக்கள் கூடி நின்று "வாழ்க பாரதியார்!", "வாழ்க கவியரசர்!" என்று கோஷிப்பதைக் கேட்கிருர். "ஆகா! நாம் கண்ட கனவுகளிலே இதுவுமா பலித்துவிட்டது?" என்று வியப்படைகிருர்.

கவியரசர் பாரதியார் இந்தப் புவியினில் வாழ்ந்த போது பற்பல கனவுகள் கண்டார். பாரத நாடு சுதந்திரம் பெற்றுச் செழித்தோங்கக் கனவு கண்டார்.

தமிழ் மொழி தழைத்தோங்கக் கனவு கண்டார். தமிழர் வாழ்வு சிறந்தோங்கக் கனவு கண்டார்.

இப்படியெல்லாம் தேசத்துக்காகவும் தேச மக்களுக்காகவும் பற்பல கனவுகள் கண்ட மகான் தமது சொந்த வாழ்க்கை இன்பத்தைப்பற்றியும் சிற்சில கனவுகள் கண்டார். அவற்றை ஆதாரமாகக் கொண்டு இன்பக் கவிதைகள் புனைந்தார்.

பாரதியார் தமக்கெனக் கண்ட கனவுகளிலே ஒன்றில் "காணி நிலம் வேண்டும்!" என்றார். "அந்தக் காணி நிலத்தினிலே ஓர் மாளிகை கட்டித் தரவேண்டும்!" என்றும் கேட்டார்.

கவியரசரின் கனவைத் தமிழ் மக்கள் இன்று நிறைவேற்றி வைத்துவிட்டார்கள்! காணி நிலத்திலே ஒரு கவின்பெறு மாளிகை கட்டித் தந்துவிட்டார்கள்!

கல்லினாலும், சுண்ணாம்பினாலும் கட்டிய மாளிகை அல்ல; சிமெண்டினாலும் இரும்பினாலும் கட்டிய மாளிகை அல்ல; பொன்னைக் கொண்டும் மணியைக் கொண்டும் கட்டிய மாளிகையும் அல்ல; அதிகாரத்துக்கும் ஆக்ஞைக்கும் பயந்து மக்கள் கட்டிக் கொடுத்ததும் அல்ல.

அன்பினாலும் ஆர்வத்தினாலும் கட்டிய மணி மண்டபம்; ஆசையோடும் பாசத்துடனும் கட்டிய எழில் மாளிகை; தமிழ் மக்கள் தங்கள் இதயங் கவர்ந்த கவியரசருக்குப் பக்தியோடு சமர்ப்பித்த காணிக்கை; ஆயிரக்கணக்கான மக்கள் நாலணா முதல் நாலாயிரம் ரூபாய் வரையில் மனமுவந்து மகிழ்ச்சி

யுடன் உதவிய நன்கொடைகளைக்கொண்டு கட்டிய அற்புதத் திருப்பணி.

இத்தகைய மணிமண்டபத்தைத் திறந்து வைப்பதற்காக, மண்டபத்திற்கு அஸ்திவாரம் நாட்டிய ராஜாஜி, கல்கத்தாவிலிருந்து பறந்து வருகிறார். வங்க மக்களின் உள்ளத்தைத் தமது அன்புப் பணியினாலும் அறிவின் சிறப்பினாலும் பரிபூரணமாகக் கவர்ந்த மேற்கு வங்காளத்துக் கவர்னர் வருகிறார். தமிழ் நாட்டின் தவப்புதல்வர் வருகிறார்.

ஒப்பற்ற புனிதத் தன்மை பொருந்திய இந்தத் தமிழர் திருவிழாவில் கலந்து மகிழ்வதற்குச் சென்னை மாகாணத்துப் பிரதம மந்திரியும், இதர மந்திரிகளும், சபாநாயகரும் விஜயம் செய்கிறார்கள்.

தமிழ் நாடெங்குமுள்ள தமிழன்பர்களும் எழுத்தாளர்களும் பத்திரிகாசிரியர்களும் வருகிறார்கள்.

"ஐயமுண்டு பயமில்லை மனமே—இந்த
ஜன்மத்திலே விடுதலையுண்டு நிலையுண்டு"

என்றும்,

"பொழுது புலர்ந்தது யாம்செய்த தவத்தால்
புன்மை இருட் கணம் போயின யாவும்"

என்றும் பாடிய தீர்க்கதரிசியின் ஞாபகார்த்த மண்டபத்தை அக்டோபர் 13உ காலையில் பொழுது புலர்ந்தவுடனே கவர்னர் ராஜாஜி திறந்து வைக்கிறார்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே!"

என்றும்,

"வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!"

என்றும் பாடிய அமுதத் தமிழ்க் கவியின் உருவச் சிலையைப் பிரதம மந்திரி ஓமந்தூர் ரெட்டியார் திறந்து வைக்கிறார்.

"பாரத நாடு பழம்பெரும் நாடே
பாடுவ மிஃதை எமக்கிலை ஈடே!"

என்றும்,

"பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு!"

என்றும் பாடிய தேச பக்த ஆசு கவியின் ஞாபகார்த்த மண்டப விழாவைப் பல்லாயிரம் மக்கள் அன்று கண்டு களிப்பார்கள்.

"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமமென்ப துறுதியாச்சு!"

என்றும்,

"ஏழையென்றும் அடிமையென்றும்
எவருமில்லை சாதியில்"

என்றும் பாடிய சமதர்ம சுதந்திரக் கவிஞரின் ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழா பூரண சுதந்திரம் பெற்ற பாரத நாட்டில் நடைபெறப் போகிறது.

பாரதி மண்டப அஸ்திவார விழா நடைபெற்ற அன்று, "அடிமை இந்தியாவில் இந்த அஸ்திவார விழாவை நடத்துகிறோம். மண்டபம் கட்டித் திறப்பு விழா நடத்தும்போது பாரதியாரின் தவம் பலித்துப் பாரத நாடு சுதந்திரம் பெற்றிருக்கும்!" என்று சொன்ன வாக்கு அற்புதமாய்ப் பலித்துவிட்டது!

பாரதியார் தெய்வத் தமிழ் மொழியில் இன்பக் கவிதைகளில் கூறியுள்ள மற்ற தீர்க்கதரிசனங்களும் கூடிய விரைவில் நிறைவேறும் என்று நம்புவோமாக! அந்த வரகவியின் வாக்கு எல்லா விதத்திலும் உண்மையாகும் என்று உறுதி கொள்வோமாக!

*"வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!*
*வாழிய பாரத மணித்திரு நாடு!*
*இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!*
*நன்மை வந்தெய்துக! தீதெல்லாம் நலிக!*
*அறம் வளர்ந்திடுக! மறம் மடிவுறுக!*
*ஆரிய நாட்டினர் ஆண்மையோடி யற்றும்*
*சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக!*
*நந்தேசத்தினர் நாடொறும் உயர்க!*
*வந்தே மாதரம்! வந்தே மாதரம்!"*

---

1947 அக்டோபர் 12ந் தேதி கல்கி இதழ் தலையங்கம்.

## பாடுவோம்! கொண்டாடுவோம்!

கவி ஒன்று கிடைக்குமானல், அதற்காகத் தனியே ஒரு விழாக் கொண்டாடலாம் என்று ரஸிக சிகாமணிகள் சொல்லுவார்கள்.

ஒரு கவிஞர் கிடைத்து விட்டால் அதற்காக எத்தனையோ விதமான எவ்வளவோ விழாக்கள் கொண்டாடலாம்.

ஒரு மகாகவி கிடைத்து விட்டாலோ, அந்த நாட்டின் மக்கள் என்ன விதமான கொண்டாட்டம் நடத்துவது என்று தெரியாமல் திண்டாடவேண்டிய தாகும்.

*　　*　　*

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஒரு நாட்டில் ஒரு மகாகவி தோன்றக்கூடும் என்று இலக்கிய ஆராய்ச்சியாளரும் சரித்திரக்காரரும் திட்ட மாய்க் கூறுகிருர்கள்.

குறைந்த பட்சம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இடையருமல் தொடர்ந்து கலைகளும் இலக்கியமும் வளர்ந்து வந்த நாட்டிலேதான் மூன்று மகாகவிகள் வரிசைக் கிரமத்தில் தோன்றி யிருக்க முடியும்.

தமிழ் நாடு அத்தகைய அதிர்ஷ்டம் வாய்ந்த நாடு. இந்த நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னல் திருவள்ளுவர் என்னும் மகாகவி தோன்றினர். சத்தியவேதம் என்று சொல்லத்தக்க தத்துவ

ஒழுக்க நூலை அற்புத சக்தி வாய்ந்த கவிதையில் அமைத்துக் கொடுத்தார்.

வள்ளுவருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு கவிச் சக்கரவர்த்தி கம்பர் அவதரித்தார். உலகத்தில் வேறு எந்த நாட்டு எந்த பாஷைக் காவியத்துக்கும் மேம்பட்டது என்று சொல்லத்தக்க இராமாயண மகா காவியத்தைத் தமிழில் செய்தளித்தார்.

(கம்பருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, நம்முடைய காலத்தில், மகாகவி பாரதியார் தோன்றினர். எத்தனையோ நூற்றாண்டுகள் அடிமையிருளில் கிடந்த நாட்டுக்கும் செத்தவர்கள் போலிருந்த நாட்டு மக்களுக்கும் புத்துயிர் தந்தார். தேச பக்தியையும் சுதந்திர தாகத்தையும் தமிழ் வெறியையும், தன்னம்பிக்கையுடன் கவிதை இன்பத்துடன் கலந்து மக்களுக்கு ஊட்டினர்.)

பாரதியாரின் பாடல்கள் பலவற்றில் அதி ஆச்சர்யமான தீர்க்கதரிசன சக்தியை நாம் காண்கிறோம். அவருடைய தீர்க்கதரிசன வாக்குகள் ஒவ்வொன்றாகப் பலித்து வருவதைக் கண்டுகண்டு மகிழ்கிறோம்.

பாரதியார் தம் காலத்தில் கண்ட தமிழ் மக்களைப் பற்றி அவ்வளவாக உற்சாகம் கொண்டு விடவில்லை. தமிழ் மக்களிடத்திலும் இந்திய மகா ஜனங்களிடத்திலும் பற்பல குறைகளைக் கண்டு நைந்துருகி நெஞ்சுருகி நின்றார்.

"நெஞ்சு பொறுக்கு திலையே—இந்த
நிலை கெட்ட மாந்தரை நினைத்து விட்டால்!"

என்று மனம் பதறிக் கதறினர்.

"நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத் திறமும் இன்றி
வஞ்சனை செய் வாரடி—கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி!"

என்று ஆத்திரத்தைக் கொட்டினர்.

ஆயினும் இத்தகைய நிலைமையைக் கண்டுவிட்டு உற்சாகக் குறைவு அடைந்துவிட்டாரோ? அடியோடு நம்பிக்கை இழந்து விட்டாரோ?

அவருடைய காலத்து 'அறிவாளி'கள் சிலரைப் போல "இந்தத் தேசம் உருப்படவாவது? இந்தியாவுக்கு விடுதலையாவது?" என்று சொல்லிக்கொண்டு இருந்து விட்டாரோ? இல்லவே இல்லை!

அந்த நிலைமையில், அப்படிப்பட்ட மக்களுக்கு மத்தியில் இருந்துகொண்டு, தீர்க்க திருஷ்டியுடன் வருங்காலத்தை நோக்கினர்.

"ஜயபேரிகை கொட்டடா" என முழங்கினர்.

"ஜயமுண்டு பயமில்லை மனமே—இந்த
ஜன்மத்திலே விடுதலையுண்டு நிலையுண்டு"

என்று கையடித்துச் சத்தியம் செய்து கொடுப்பது போல் உறுதி கூறினர்.

காரிருளுக்கு மத்தியில் பேரொளி பொங்கிவரும் அறிகுறிகளைக் கண்டார். அடிமைத்தனத்துக்கு

மத்தியில் விடுதலையின் உதயப் பிரகாசத்தைக் கண்டு வரவேற்றார்.

இந்தியாவைப் பிடித்திருந்த பீடைகளும் இந்திய மக்களிடம் குடிகொண்டிருந்த இழி குணங்களும் விரைவிலே அகன்று போய்விடும் என்பதை உள்ளுணர்ச்சியினால் மகாகவி பாரதியார் நிச்சயமாய் அறிந்தார்.

"வலிமை யற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ."

என்ற பாடலில், அச்சம் மடமை பலவீனம் முதலிய மக்களின் குறைபாடுகளை யெல்லாம் அடித்து விரட்டுவதுபோல் சபித்து ஓட்டினார்.

"வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ"

என்று தாய் மொழிப் பற்றில்லாதவர்களை நாடு கடத்தினார்.

"ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ
தருமமொன் றியற்றிலாய் போ போ போ
நீதி நூறு சொல்லுவாய்—காசொன்று
நீட்டினால் வணங்குவாய் போ போ போ"

என்று மூட நம்பிக்கையாளரையும் சமூகத் துரோகிகளையும் அதட்டி அடித்தார்.

பின்னர், வருங்காலத்தில் வரப்போகும் உண்மையான பாரத ஜாதியை ஞானக்கண் கொண்டு

பார்த்து சக்தி வாய்ந்த சொற்களினுல் அற்புதமான கவிதை செய்து வரவேற்ருர் :

"இளைய பாரதத்தினுய் வா வா வா
எதிரிலா வளத்தினுய் வா வா வா
ஒளியிழந்த நாட்டிலே—நின்றேறும்
உதய ஞாயி றொப்பவே—வா வா வா
களையிழந்த நாட்டிலே—முன்போல
கலைசிறக்க வந்தனை வா வா வா
விளையு மாண்பு யாவையும்—பார்த்தன் போல்
விழியினுல் விளக்குவாய் வா வா வா"

இப்படிப்பட்ட தீர்க்கதரிசனத்துடன் சுதந்திர பாரதத்தை அகக் கண்ணினுல் கண்டு வரவேற்புக் கூறிய மகானுக்கு எத்தனை விழாக்கள்தான் நடத்தக் கூடாது? தினந்தினம் ஒரு கொண்டாட்டம் ஊரெங்கும் நாடெங்கும் நடத்தி மகிழலாமே?

பாரதி வாழ்ந்திருந்த காலத்து மக்களின் இலட்சணத்தைப்பற்றி அவரே நன்ருகப் பாடியிருக்கிருர். தெளிவான வசன நடையிலும் "மண்ணுலகம்" என்னும் ஞானரதப் பகுதியில் எழுதியிருக்கிருர்.

ஆகவே, பாரதி வாழ்ந்திருந்த காலத்திலும் அதற்குப் பிற்பாடு சில காலம் வரையிலும்கூடத் தமிழ் மக்களில் பெரும்பாலோர் "பாரதி யார்"? என்றும் "எந்தப் பாரதி?" என்றும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இப்போதெல்லாம் அப்படி யாரும் கேட்பதில்லை. "நம்முடைய பாரதியார்!" என்று பெருமையுடன் மார் தட்டிக்கொண்டு சொல்கிருேம். "கவியரசர் பாரதியார்" என்றும் "மகாகவி பாரதியார்"

என்றும் போற்றிப் புகழ்கிரும். பாருக்கெல்லாம் அவர் பெருமையை நாம் பறை சாற்றுகிரும்.

* * *

இந்த வருஷத்தில் பாரதியார் விழாவை முந்தைய வருஷங்களைக் காட்டிலும் அதிகக் குதூகலத்துடன் கொண்டாடுவதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது.

பாரதியார் பாடல்களின் அச்சுப் பிரசுர உரிமையும் ஒலிப்பதிவு செய்யும் உரிமையும் தனிப்பட்ட அன்பர்களின் தனிச் சொத்துரிமையாக இருந்தது, பல பாரதி பக்தர்களின் உள்ளத்துக்குத் துன்பத்தை அளித்து வந்தது. இந்த வருஷத்தில் பாரதியார் பாடல்களுக்கிருந்த அந்த பந்தங்களெல்லாம் நிவர்த்தியாகிவிட்டன.

மேற்படி இருவித உரிமைகளும் பொது மக்களின் உடைமையாகிப் பொதுஜன சர்க்காரால் இப்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இவ்விதமாக அநேக பாரதி பக்தர்கள்—தமிழன்பர்கள் மனத்தில் பொங்கிக் கொண்டிருந்த தாபத்தைத் தணித்துப் பாரதியார் பாடல்களைப் பொது உடைமையாக்கிக் கொடுத்த சென்னை மாகாண காங்கிரஸ் சர்க்காருக்கு நமது மனமார்ந்த நன்றியை இந்தப் புனிதத் திருநாளில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிரும்.

அந்தக் காரியம் சாத்தியமாவதற்குப் பெரிய மனதுடன் உதவி புரிந்த ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பச்

செட்டியார் அவர்களையும், ஸ்ரீ சி. விச்வநாதய்யர் அவர்களையும் இன்று பாரதி திருவிழா தினத்தில் பாராட்டுகிறோம்.

மகாகவி பாரதியார் தமது சொந்தக் கரத்தினால் முத்துப்போன்ற எழுத்துக்களில் எழுதிய கையெழுத்துப் பிரதிகளை ஸ்ரீ சி. விச்வநாதய்யர் அவர்களிடமிருந்து சென்னை சர்க்கார் பெற்று எழும்பூரில் உள்ள அரசாங்கக் கண்காட்சிசாலை(மியூஸியம்)யில் வைத்திருக்கிறார்கள். இதுவும் போற்றத் தகுந்த செயலாம். இந்தக் கையெழுத்துப் பிரதிகளைப் பத்திரமாக வைத்துப் பாதுகாத்து வந்தால் தலைமுறை தலைமுறையாகத் தமிழ் நாட்டில் பிறக்கப்போகும் சந்ததிகள் இந்தப் பிரதிகளைப் பார்த்துப் படித்துக் கண்ணிலே ஒற்றிக்கொண்டு மகிழ்வார்கள்.

---

*1949 செப்டம்பர் 11ந் தேதி கல்கி இதழ் தலையங்கம்.*

## பாரதியின் லட்சியங்கள்

சென்ற வாரக் கடைசியில் தமிழ் நாடு எங்கும் தமிழ்ப் பெரு மக்களின் அகமும் முகமும் மலர்ந்தன; கண்களும் காதுகளும் குளிர்ந்தன.

தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் கவிச் சக்கரவர்த்தி பாரதியாரின் நாமம் ஒலித்தது; எட்டுத் திசையிலும் அவரது அமுத கீதங்கள் மிதந்து வந்தன; பல்வேறு சங்கங்களின் ஆதரவில் பாரதி விழாக்கள் விமரிசையாக நடைபெற்றன.

கவிச் சக்கரவர்த்தி பிறந்த எட்டயபுரத்தில் பாரதி ஞாபகார்த்த மண்டபத்தில் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களின் தலைமையில் ஏராளமான மக்கள் கூடித் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் புத்துயிர் அளித்த மகானுக்கு அஞ்சலி செய்தார்கள்.

நாடெங்கும் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போன்ற காட்சியைக் கண்டு ஆயிரக் கணக்கான பொதுமக்கள் மனம் பூரித்தார்கள்.

சென்னை பாரதி சங்கத்தின் சார்பில் நடந்த பாரதி தின விழாவில் தவயோகி சுத்தானந்த பாரதியார் கவியோகி பாரதியாருக்குப் பாமாலையும் புகழ் மாலையும் சூட்டிப் பரவசம் அடைந்தார்.

அமர வாழ்வு பெற்றுப் புகழுடம்புடன் விளங்கும், தமிழர்களின் நாவிலும் உள்ளங்களிலும் வீற்றிருக்கும் பாரதியார் அன்று எல்லா இடங்களிலும் பிரசன்னமாகியிருந்தார்.

' நான் அமரன் ' என்று பாரதியார் அடிக்கடி கூறுவது உண்டு என்று யோகி சுத்தானந்தர் தமது தலைமைப் பேருரையில் குறிப்பிட்டார்.

பாரதியாரின் தீர்க்கதரிசனங்கள் பலவும் பலித்து வருவதைப்போல் தமது அமர வாழ்வுபற்றி அவர் கூறியதும் பலித்ததைச் சென்ற வாரம் மக்கள் கண்டு களித்தனர்.

சென்னையில் சிறப்பாகப் பாரதி விழாக் கொண் டாடுவதன் தனிப் பொருத்தத்தைத் தவயோகி சுத்தானந்த பாரதியார் எடுத்துக் கூறினர்.

" பாரதியார் எட்டயபுரத்தில் பிறந்தார் ; புதுவை யில் கவி சுரந்தார் ; சென்னையில் புகழ் சிறந்தார் ; என்று விளக்கினர்.

* * *

' பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் ' என்ற பழ மொழியைப் பொய்த்துப் போகும்படி செய்த மகிமை பாரதியார் ஒருவருக்கே உரியது.

இந்த உலகத்திலே எத்தகைய இன்னல்களையும் எதிர்த்து நிற்கும் இரகசியத்தைப் பாரதியார் மக் களுக்கு உபதேசித்ததுடன் செயலிலும் காட்டினர். அச்சத்தைத் தவிர்ப்பதே அந்த இரகசியம் ஆகும். அச்சத்தைக் காட்டிலும் பாரதியார் வெறுத்த விஷயம் வேறு எதுவுமே இல்லை. " யானெதற்கும் அஞ்சு கிலேன் மானிடரே " என்று முழங்கினர். அண்டஞ் சிதறினும் அஞ்சாதீர் ; அஞ்சி அஞ்சி வறுமைக்கும் வஞ்சகக் கவலைக்கும் இடம் கொடாதீர் என்று உப தேசித்தார்.

அச்சம் என்ற நோயால் அவஸ்தைப்படுவோரை, 'அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே' என்று நிந்தையாகப் பாடினார். 'உச்சிமீது வானமே இடிந்து விழுந்தாலும் அச்சமில்லை, அச்சமில்லை' என்று வீர சங்கநாதம் செய்து, ஆண்மை ஊட்டிய பாரதியாரின் மகத்துவத்துக்கு ஈடு இணை ஏது?

பயமில்லாதவர்களுக்கு நிச்சயம் ஜயம் உண்டு என்ற தத்துவத்தை என்றும் அழியாத பசும்பொன் எழுத்துக்களால் பொறித்த கவிச்சுடரின் தெய்வீக ஒளி தமிழ்மொழி உள்ள வரையில் குன்றாது விளங்கும் அல்லவா?

* * *

பாரதியாரின் இலட்சியங்களில் மிகவும் முக்கியமான இலட்சியம் நம் காலத்தில் நிறைவேறிவிட்டது. பாரத தேசம் அன்னியர் அடிமைத் தனத்திலிருந்து நீங்கிப் பூரண சுதந்திரம் பெற்று விட்டது.

"பூரணமான சுதந்திரம் பெற்றோம்
புதுயுக மனிதராய்ப் பொலிந்தோம்
தாரணி முற்றும் சரிநிகர் ஆனோம்.
தலைநிமிர்ந்து ஆண்பெண்ணும் நடந்தோம்.
ஆரமுதனைய கலைவளஞ்செழித்தோம்
அச்சமாம் பேயினை ஒழித்தோம்,
பாரதி வீரக் கனிரச விருந்தாம்
பாமணம் பரவிய நாளே!"

என்று யோகி சுத்தானந்த பாரதியாரும் பாடி மகிழ்ந்து விட்டார்.

ஆனால் பாரதியாரின் இலட்சியங்களில் இன்னும் பூரணமாக நிறைவேறாத இலட்சியங்களும் இருக்கத் தான் செய்கின்றன.

*''இல்லையென்ற கொடுமை உலகில்*
*இல்லையாக வைப்போம்!''*

என்ற பாரதியாரின் வாக்கு இன்னும் நமது நாட்டிற் குள்ளேயே நிறைவேறவில்லை; விரைவில் நிறை வேறும் என்பதற்குரிய அறிகுறிகளும் காணப்பட வில்லை.

ஒருபக்கத்தில் 'கல்வி இல்லை' என்ற கூக்குரல் எழு கிறது. நூற்றில் எண்பத்தைந்து பேர்வீதம் இன்னும் எழுத்தறிவில்லாதவர்களாகவே இருந்து வருகிறார்கள். நூறு குழந்தைகளில் ஐம்பத்தைந்து குழந்தைகள் இன்னும் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படாமலே இருக்கிறார்கள்.

போதிய அளவு பள்ளிக்கூடங்கள் இல்லை; இருக்கிற பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் போத வில்லை; ஆசிரியர்களுக்குச் சம்பளம் போதவில்லை.

கல்வியறிவு படைத்தவர்களுக்குப் போதுமான வேலையில்லை; வேலையுள்ளவர்களுக்குப் போதிய வருமானம் இல்லை.

நோய்ப்பட்டவர்கள் சிகிச்சை செய்துகொள்ளப் போதிய வைத்திய சாலைகள் இல்லை; பயிற்சி பெற்ற வைத்தியர்களும் இல்லை.

வறுமையின் கொடுமையைப்பற்றியோ சொல்ல வேண்டியதில்லை.

‘ வருத்தமழிய வறுமை யொழிய
வையமுழுதும் வண்மை பொழிய
வேண்டுமடி எப்போதும் விடுதலை !’’

என்று பாரதியார் பாடினுர். அத்தகைய விடுதலை, ‘ வருத்தமும் வறுமையும் ஒழிந்த ’ விடுதலை, இன்னும் இந்நாட்டு மக்களில் பெரும்பாலோருக்குக் கிட்டவில்லை.

பாரதியாரின் தேச சுதந்திர இலட்சியத்துக்கு அடுத்தபடியாக அவர் கொண்டிருந்த முக்கியமான இலட்சியம் வறுமைப் பிணியை ஒழிக்கும் இலட்சியமேயாகும். அந்த இலட்சியம் நம் காலத்தில் நிறைவேறுவதற்கு நாம் ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும்.

‘‘ சாதிகள் இல்லையடி பாப்பா— குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் ’’

என்று பாரதியார் பாடினுர். இந்த இலட்சியம் கொள்கையளவில் இப்போது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் வாழ்க்கையிலும் செயலிலும் பூரணமாக நிறைவேறவில்லை. சாதிப் பிரிவினையை அடிப்படையாகக்கொண்ட கிளர்ச்சிகளும், பிரசாரங்களும் வளர்ந்து வருகின்றன. பாரதியின் வாக்கு இந்தத் துறையிலும் நிறைவேற வேண்டும்.

பாரதியார் தமிழன்னையை எவ்வித மெல்லாம் போற்றிப் பாமாலை புனைந்து அளித்திருக்கின்ருர் என்பது அனைவரும் அறிந்ததே.

‘‘ சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா !’’

என்று பாடினுர். ஆயினும் நம்மவர்களை விட்டு

அன்னிய மொழி மோகம் இன்னும் நீங்கி விட்டதாகச் சொல்ல முடியாது.

*" நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரி எல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக்கிடக்கும் தமிழ் நாடு!"*

என்று பாரதியார் தமிழ் நாட்டின் எல்லையைத் திட்டமாக வகுத்துப் பாடி வைத்துவிட்டுச் சென்றார்.

இன்றைக்கு அவர் குறிப்பிட்ட இரண்டு எல்லைகளும் தமிழ் நாட்டைச் சேர்ந்தனவாக இல்லை. திருப்பதி ஆந்திர ராஜ்யத்திலும், குமரிமுனை திருவாங்கூர் ராஜ்யத்திலும் இருந்து வருகின்றன.

தமிழகத்தின் எல்லை சம்பந்தமான பாரதியாரின் இலட்சியமும் நிறைவேற வேண்டும். அதற்கான பிரயத்தனங்களைச் செய்வதை ஒவ்வொரு தமிழரும் தமது முதன்மையான கடமையாகக் கருத வேண்டும்.

இவ்விதம் பாரதியாரின் பாடல்களில் பொதிந்து கிடக்கும் இலட்சியங்கள் அனைத்தும் நமது காலத்தில் நிறைவேற வேண்டும் என்று பிரார்த்திப்போமாக. அதற்கான முயற்சிகளைச் செய்வோமாக. அம்முயற்சிகளுக்குப் பாரதியாரின் பாடல்களே நமக்கு வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அத்தகைய தெய்வீக சக்தி வாய்ந்த பாரதி பாடல்களை நினைவூட்டிக் கொள்ளவும், பிரசாரம் செய்யவும் பாரதி விழாக் கொண்டாடுதல் தக்க வாய்ப்புத் தரும் சந்தர்ப்பம் அன்றோ?

---

1954 செப்டம்பர் 19ந் தேதி கல்கி இதழ் தலையங்கம்.